5, மந்தைவெளிசந்து, மயிலை

தென்றல்

ஆசிரியர்:- கண்ணதாசன்.

உள்நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணு | வெளிநாடு மூன்றணு | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-4

மலர் 2 | சென்னை 3—4—56 செவ்வாய்க்கிழமை | இதழ் 42

தென்னை மரம்-பனை மரம்-பாக்கு மரம்

கண்ணதாசன்

"ஏன்னங்க! வாங்க வாங்க!

ஒங்களைத்தான் பாக்கனும்னு நினைச்சேன். அதுக்குத்தான் புறப்பட்டேன். நீங்களே வந்துட்டீங்க. ரொம்ப சந்தோஷம். எப்படி இருக்கீங்க!—ஒங்க கதையைப் படிச்சேன். ரொம்பப் பிரமாதம்....,. நேத்துக்கூட ஒங்களைப் பத்தித்தான் பேசிக்கிட்டிருந்தோம்!''

இப்படிச் சில பேர் ஆளைக்கண்டால் போதும்; தோளைக் குலுக்கி, முகத்தை மலர வைத்துக்கொண்டு, மடமடவென வார்த்தைகளைப் பொழிவார்கள். எதிரே நின்று இந்தப் புகழ் மொழிகளைக் கேட்பவனுக்கு இதயம் பூரிக்கும்; வார்த்தை வராது; அப்படியே கூனிக்குறுகி அந்தப் புகழ் மொழிகளுக்கு நன்றி கூறத் தோன்றும்.

"நண்பர்கள்'' பலவகை; அதில் மேற்காண்பது ஒருவகை. இது நட்பா! இவர் நண்பரா! இல்லையென்கிறான் வள்ளுவன்!

முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்
தகநக நட்பது நட்பு.

—என்கிறான்.

நட்பிற்கு இலக்கணம் கூறியவர்கள் பலர். அவர்களில் யாரும், வள்ளுவன் கருத்தை மறுத்தவர்களல்லர்.

நட்பு-ஈடுகாட்ட முடியாத ஒரு கருத்து! இதனை நன்றாகப் புரிந்துகொண்டவர்களுக்கு இதுதான் வாழ்க்கையின் முதல் திட்டமாக இருக்கும்.

நல்ல நண்பர்கள் கிடைப்பது அபூர்வம்; கிடைக்கும் நண்பர்களைக் காப்பாற்றிக் கொள்வது மிகப் பெரிய காரியம். வாழ்வின் உயிர்நாடியே நல்ல நட்பில்தான் அடங்கியுள்ளது.

சராசரி மனிதன் தனது அன்றாட வாழ்வில் ஏற்படுகிற இன்ப துன்ப அனுபவங்களை நெருங்கிய நண்பர்களோடு பகிர்ந்து கொள்வதைப் போல் சாரமான நிம்மதி வேறு எதுவுமே இல்லை. மலையளவு துன்பங்களை மனதுக்குள்ளே அடக்கிப்போட்டு நைந்து சாகும் நிலையிலிருந்து நட்பு வி(ி)தலையளிக்கிறது. "இதென்ன பெரிய காரியம்? இதற்குப் போய் கவலைப்படுகிறாயே! மிகச் சுலபத்திலே இந்தச் சிக்கல் தீர்ந்துவிடும்.'' என்று ஆறுதல் மொழி கூறி கண்ணீரைத் துடைக்கும் நண்பன், பயம்பட்ட குழந்தையைக் கட்டி அணைக்கும் தாயைவிட உயர்ந்தவன். பால்போலும் தெளிவான இதயங்கள் இரண்டு, பண்போடு ஒட்டி உறவாட, வெளியுலகம் சிறிதளவும் காணக்கூடாத செய்திகளைக்கூட இரண்டு நெஞ்சும் பரிமாறிக்கொள்ள அந்தப் பரிமாற்றத்திலே உடம்பு இரண்டுக்கு உயிர் ஒன்று என ஒன்றிவிட அங்கே ஒன்று சேர்ந்த இரண்டு நண்பர்களும் முறிக்கமுடியாத பலத்தைப் பெற்றுவிடுகிறார்கள். அறிஞர் அண்ணு அவர்கள் சொன்னதுபோல, நல்ல நண்பர்களை அதிகம் பெற்றவன் அழியாத செல்வம் படைத்தவனுகிறான்.

நல்ல நண்பன்!-யார் அவன்?

மனைவியிடம் சொல்லக்கூடாத ரகசியங்களைக்கூட மனதாரப் பரிமாறிக்கொண்டு பத்திரமாகக் காப்பாற்றுகிறவன் நல்ல நண்பன். நண்பனுக்குக் கால்வலி என்றால் அதைத் தன் நெஞ்சுவலியாகக் கருதுகிறவன் நல்ல நண்பன். வறுமையில் வாடுகிறான் நண்பன் என்றால் அந்த வறுமையைக் கண்டு அலட்சியம் செய்யாமல் அவனை அரவணைத்துக் கொள்கிறவன் நல்ல நண்பன். சுருங்கச் சொன்னால் நண்பனது மலர்ச்சியைக் கண்டு மலர்ந்தும், வளர்ச்சியைக் கண்டு மகிழ்ந்தும், தளர்ச்சியுறும் போது கலங்கியும் சாகும்வரைக்கும் துணையிருப்பவன் நல்ல நண்பன்.

பிசிராந்தையார் - கோப்பெருஞ்சோழன்,

கபிலர்-வேள்பாரி.

அவ்வையார்-அதிகமான்.

இப்படி நாம் கேள்விப்படுகிற நண்பர்களெல்லாம் எப்போதும் ஒன்றாக இருந்தவர்கள். இருவரிடத்தும் தனித்தனியாக உறவு கொண்டவர்கள் பலபேர் இருந்தார்கள். ஆனால் அவர்கள் எவரும் இந்த இருவருக்கிடையே வளர்கிற நட்பை சிதைக்க முடியவில்லை. காரணம், இவர்கள் நட்பு அகநக நட்பு.

நல்ல நண்பர்களைப் பிரிக்கக் கூடியவர்கள் அந்த நண்பர்களோடு தனித்தனியாக உறவாடுகிறவர்கள் தான். பக்குவமில்லாத மனம், கேட்பார் சொல் கேட்கும். அந்தச் சொல்லுக்கு நண்பனின் மனத்திலே வலுவான இடம் கிடைத்து விட்டால் நல்ல முறையில் தொடங்கிய நட்புக்கூட சிதைந்துபோகும்.

பழந்தமிழ்நாட்டில் நட்பை மூன்று வகையாகப் பிரித்திருந்தார்கள்.

தலையாய நட்பு.

இடையாய நட்பு.

கடையாய நட்பு.

தலையாய நட்புக்கு பனைமரத்தை உவமித்தார்கள். இடையாய நட்புக்குத்தென்னைமரத்தையும்,கடையாய நட்புக்குப் பாக்குமரத்தையும் ஈடு கட்டிக் காட்டினார்கள். நடும்போது மட்டும் பனைமரத்திற்குத் தண்ணீர் ஊற்றவேண்டும். நாளடைவில் அது வளர்ந்து பலன் தரும். தென்னைமரத்திற்கு இடையிடையே தண்ணீர் ஊற்றவேண்டும். ஊற்றினால்தான் வளரும்; பலன்தரும். பாக்குமரமோ தினசரி கவனித்தாலொழிய பலன் தராது.

ஒரு முறை முளைத்த நட்பை உயிருள்ளவரை கடைப்பிடிக்கும் பண்புதான் உயர்ந்த நட்புக்குச் சான்றாகும். "பத்துப் புதிய நண்பர்களைச் சம்பாதிப்பதைவிட ஒரு பழைய நண்பனைக் காப்பாற்றிக் கொள்வதே சாலச்சிறந்தது'' எனக் கூறப்படுவதும் இதனால்தான்.

'இவரைச் சேர்ந்தால் இன்னது கிடைக்கும்'-என்று கணக்கிட்டுச் சேருவது நட்பல்ல; தொழில். ஆனால் இப்படிக் கணக்குப் போட்டுச் சேருகிறவர்களும் நல்ல நண்பர்கள்போலத்தான் பேசுவார்கள். இதனை ஆராய்ந்து தெளிவது தான் அறிவுடையோர் பண்பு. இவர்கள் முகத்துக்கு நேரே புகழுவார்கள். 'உங்களுக்கு ஈடு இந்த உலகத்திலே யார்' என்பார்கள். உல்லாசப்பயணம் போகும்போது கூடவே வருவார்கள். நல்ல முறையில் நட்புப் பாராட்டக் கூடியவர்கள் நம்மை அண்ட விடாமல் தடுப்பார்கள். உன்னைப் பற்றி இப்படியெல்லாம் பேசினான் என்றும் துணிந்து பொய் சொல்லுவார்கள். அந்தப் பொய்யையும் பக்குவமாகக் கற்பனையோடு சோடித்துக் காட்டுவார்கள். நமக்கு நிறைய விரோதிகளை ஏற்படுத்திவிட்டு அந்த விரோதிகளை தாங்கள் அடக்கிவிடுவதாகப் பாவனைகாட்டி நாம் அறியாத விதத்தில் நம்மையே வம்பில் மாட்டிவைப்பார்கள். சேர்ந்து கழுத்தறுக்கும் இந்தத் தீயவர்கள்தான் நமக்கு நல்ல நண்பர்கள்போல் தோன்றுவார்கள்.

இதிலிருந்து எச்சரிக்கையோடு தப்பித்துக்கொள்வது மிகப் பெரிய காரியம்.பண்புடையாளர் தொடர்பு இருந்தால் இத்தகைய 'நண்பர்கள்' நெருங்கவே பயப்படுவார்கள். அதனால்தான் வள்ளுவனும் நட்பிலேகூட பண்புடையாளர் நட்பே தேவை என்று வற்புறுத்தினான்.

சிரித்துப்பேசி 'ஜாலியாக' இருப்பதற்காக நண்பர்களாகாமல் தவறு கண்டபோது தாக்கித் திருத்தும் குணத்தோடு நண்பர்களாக வேண்டும் என வலியுறுத்தினான் வள்ளுவன்.

கோட்டுப்பூப்போல மலர்ந்த பிறகு கூம்பாத மனப்பக்குவம் பண்புடையாளர் தொடர்பினால் தான் கிடைக்கும். நாம் சொல்லுவதற்கெல்லாம் ஆமாம் போடுகிறவர்கள் பண்புடையாளர்களல்லர்; பணமுடையாளர்கள். ஆகவே, பண்புடையாளர்களிடத்தில் நண்பர்களாகச் சேர்ந்து அந்த நட்பில் இடைவெளி தோன்றாமல் காப்பாற்றி வந்தால் நட்பின் பயனைப் பெறமுடியும். வள்ளுவனது பத்துப் பாடல்கள் நட்புக்குச் சரியான இலக்கணம் கூறிவிடுகின்றன.

செயற்கரிய யாவுள
நட்பி[illegible]
வினைக்குரிய யாவுள காப்பு.

நிறைநீர நீரவர்
கேண்மை [illegible]
பின்னீர பேதையார் நட்பு.

நவில்தொறும் நூனயம் போலும்
பயில்தொறும்
பண்புடையாளர் தொடர்பு.

நகுதற் பொருட்டன்று
நட்டல் மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு.

புணர்ச்சி பழகுதல்
வேண்டா [illegible]
நட்பாம் கிழமை தரும்.

முகநக நட்பது நட்பன்று [illegible]
தகநக நட்பது நட்பு.

அழிவி னவைநீக்கி
யாறு[illegible]
னல்லல் உழப்பதா[illegible]

உடுக்கை யிழந்தவன்
கைபோல [illegible]
இடுக்கண் களைவதாம் நட்பு.

நட்பிற்கு வீற்றிருக்கை
யாதெனிற் கொட்[illegible]
பொல்லும்வா யூன்றுநிலை.

இனைய ரிவரெமக்
[illegible]
புனையினும் [illegible]

மொட்டு அவிழ்ந்த மல்லிகை !

அனுபவம்! அதன் உள்ளடங்கிக் கிடக்கும் ஆழ்ந்த உணர்ச்சிகள் உணர்தற்கு அரியன! ஆயிர மாயிரம் எண்ணங்கள் அந்த வார்த்தையில் ஆழ்ந்து துயில் கொள்ளும். அவைகளைத் தட்டி யெழுப்பி—இலக்கிய உலகில் உலா டச் செய்வது எளிதன்று. அதுவும் வார்த்தைகளை வைரங்களாக்கி—வெகு நளினமாக கவிதை பாடுவது சங்கப்புலவர்களாலேயே கூடுவ தாம்!

என் நண்பன் — கம்பீரமான தோற்றம்! தினவெடுக்கும் தோள் களைத் தழுவியிருக்கும் பரந்த மார்பு நிமிர்ந்து நிற்கும்' வீரனுக் குரிய எல்லா அம்சங்களும் அவனிட மிருந்தன. மலையைப் போன்று நிலைகுலையா உள்ளம் படைத்தவன்! மாற்றரும் வேற்றரும் அவனைக் கண்டு அஞ்சுவர்! வீண் வம்பு அவனுக்குத் தெரியாது — வலுச் சண்டைகளை விட்டதில்லை அவன்!

அனுதாபத்தையும் ஆதரவையும் தேக்கிச் சுழலும் அவன் விழிகள்! குறும்புப் புன்னகை அவன் உதடு களிலே புரளும்! அழகிய முகம்! வைரம் பாய்ந்த தேகக் கட்டு!

அக்காலங்களில் அழகு மணி மாடங்கள், எழிலூறும் கூட கோபுரங்கள்—எங்கும் காணும்! இற்றைக்கும் இருக்கின்றன — மொட்டை மாடிகள், மோகனக் கூடங்கள்! ஒரு மொட்டை மாடி—ஆமாம் அதுதான் நிலாமுற்றம் என வைப்போம்! அந்தி மயங்கும் நேரத் திலே அந்த வழி நடப்போம்! 'நான் வாரேன்' என்றாலும் 'விடேன், தொடேன்' என்று என்னை இழுத்துச் செல்வான் சந்திரன்.

நீலம்பூத்த விசும்பு — அழகுத் துகிலால் அழகுபடும்! கதிரோனின் செங்கதிர்கள் நீலவானத்தில் பல வர்ணம் சேர்த்து—வண்ணம் சேர்க் கும்! மொட்டைமாடி என்றேனே—அதை மறந்திருக்கமாட்டீர்கள் என எண்ணுகிறேன். அந்த நிலாமுற் றத்தை அழகுபடுத்த அழகி யொருத்தி—அந்த அந்தி நேரத்தில் அசைந்து வருவாள்! அந்தி சில சமயங்களில் சீக்கிரமாக மந்தமாகிப் போகும்! ஆனால் நாங்கள் செல் வதோ, அந்த அழகி மாடியில் வருவதோ என்றும் மந்தமாகியது கிடையாது!

அழகைப் புகழும் அவள் விழிகள் மின்னல் வேகத்தில் சுழலும்! என் நண்பனின் நயனங்களை விநாடியில் சுற்றிச் செல்லும்! குறும்பு புரளும் அவன் உதடுகள் 'கரும்புச் சுவை யை'க் கொல்லும் அக்காரிகையின் கனியிதழை அழைக்கும்! வாய் பேசாத அந்த இரு ஜீவன்கள்—கண்ணசைவிலே, உதட்டுச் சிரிப் பிலே இன்பங் கண்டன!

அழகும் வீரமும் பின்னிச் சேர்ந் தன! எல்லாம் வாய்பேசாமலேயே நடைபெற்றது! தூரத்திலிருந்தே துடித்தன—இரு இதயங்களும்! ஒரு நாள்...! என் நண்பன், என் னிடம் விடை பெற்று—என்னைத் தனியே விட்டு, அவளிடம் சேர்ந் தான்! சிலமணி நேரத்தை, சில விநாடிகளாகக் கழித்து வந்தான் அவன்! நானோ யுகமாக எண்ணி ஏங்கிக் கழித்தேன்!

"என்ன சொல்லிற்று அந்தச் சிட்டு?" என்றேன்.

"சிட்டு அல்லடா அவள்! மொட்டு அவிழ்ந்த மல்லிகையடா," என்றான் இன்பம் மணக்க.

"அதுதான் தெரிகிறதே! அவள் என்னதான் சொன்னாள்...?" என் றேன்.

"எனக்கு வீரமில்லையாம்—நீயாவது கொடுக்கக் கூடாதா என்று...!" அவன் அதற்குமேல் சொல்லாமல் சொற்களை விழுங் கினான்.

"மருளும் மானை முயங்கச் சென்றதாலேயே வரிப்புலியின் வீரம் மங்கிவிட்டதாகவா எண்ணு கிறாய்? சுத்த சூன்யமடா நீ!" என்றேன்.

"நண்பா! உன்னிடம் தவிர நான் வேறு யாரிடம் என் நிலையை சொல்லப் போகிறேன் நேருக்கு நேர்—ஒரு கணம் விழிகள் சுழன்று சுருண்டுப் போயின! கூர் வேலி னும் கொடிய பாய்ச்சல்' உடை யன அவள் விழிகள்! என் உள்ள மெல்லாம் அந்தப் பார்வை குத்திக் குடைந்தது! தூரத்திலிருந்த தைரி யம் அருகில் சென்றதும் குறைந்து விட்டது! உள்ளத்துணிவு ஊமை யாகிப் போனது! இந்த நாக்குத் தடுமாறியதை நீ கண்டிருந்தால்...! வெட்கம் ராஜா, வெட்கம்! ஆனால் அதில்தான் இன்பம் இருப்பதாக எண்ணுகிறேன்! பெண்கள் நாணத் தின் நாயகங்கள் எனக் கேள்விப் பட்டிருக்கிறேன். சரியான அறி முகமில்லாத போழ்துதான் அந்த நாணமெல்லாம்! நல்ல அறிமுகத் தில்—நாம்தான் நாணம் கொள்ள வேண்டியிருக்கிறது!" என்றான்.

"என்னடா, இது? நாணம், அது இது என்றெல்லாம் பேசுகிறாய்! உன் உள்ளப் பாங்குக்கும் உறுதிப் பாட்டுக்கும் முன்னே அவள் எம் மாத்திரம்? அச்சம் தவிர்மின்...!" என்றேன்.

"வாடா, போகலாம்...!" என் றான். இருவரும் நடந்தோம்.

★

சில நாட்களாக—அந்த மாடி வீட்டு மாடப்புறாவைக் காணோம்! என் நண்பனின் களிப்பெல்லாம் கவலையாகியது. பிரிவுத்துயர் அவனை வாட்டியது! என் சமா தானமெல்லாம்—அவன் மனச்சாந் திக்கு வழி வகுக்க முடியாமல் திண றின.

"மலைகுலையா உள்ளம் படைத்த நீ, இந்தப்பிரிவுக்கா பித்தம் பிடித்து அலைவது? இன்னும் சில நாட்கள்—ஊர் சென்றுள்ள அவள் திரும்பி விடுவாள்! இதற்கு ஏன் ஏக்கமும் மனத்தேக்கமும்?" என்று சாந்தி கூறினேன்.

"உனக்கு என்னடா தெரியும் என் நிலை? பட்டால்தான் தெரி யும்?" என்று பிதற்றினான்.

அவன் மனநிலையில் குழப்பம் குதித்தது. காதல் பித்தம் மூளை யில் தகித்தது. 'சிறு பிரிவுக்கா—உன் வீரமெல்லாம், உறுதியெல் லாம் தணிந்து போவது?' என் றேன்.

"அந்த மென்மைக்கு முன்னே—என் வண்ணம் பணிந்து போவது இயல்பே! அது உனக்கு விளங் காது—அனுபவித்தால் தான் தெரி யும்!" என்றான்.

"சந்திரா! நீ பெரிய அனுபவ மேதையடா...!" என்றேன் சிரித் துக்கொண்டே!

★

ஒரு நாள் குறுந்தொகையை படித் துக் கொண்டிருந்தேன். அதில் ஒரு பாடல் என் மனதை ஈர்த்தது. ஆமாம், என் நண்பன் சந்திரனின் அனுபவம் அப்பாடலை ஆமோதித் தது. அனுபவப் பாடல் இதோ...

"சிறுகுடிக் குறவன்
பெருந்தோள் குறுமகள்
நீர் ஓரன்ன சாயல்
தீ ஓரன்ன என்
உரன் அவித்தன்றே"

—(கபிலர்)

நண்பன் சோர்ந்து இருந்தான்! அவன் நிலை கண்ட அவன் தோழன் இப்படிக் கேட்டான்: "நண்பா! உன் வலிமை எனக்குத் தெரியும், பகைவர்கள் உன்னைக் காணின் ஓடி ஒளிவர். ஒரு மங்கையின் மைய லுக்கா இப்படி மனம் நொந்து, நிலை வேந்து கிடப்பது?" என்றான்.

நண்பன் வறட்டுச் சிரிப்போடு தன் தோழனைப் பார்த்தான்—பேசினான்! "தோழா! உனக்குப் பெண்மையின் மையல் தெரியாது. மலைநாட்டு அம்மங்கையின் மென் மையான தன்மை நீரைப் போன் றது, அந்தக் குளிர்ந்த தண்ணீ ருக்கு முன்னே, என் தீ போன்ற வலிமை அவிந்து விட்டது!" என்றான்.

கபிலரின் இப்பாடலில்தான் எத் துணை உண்மையும் அனுபவமும் தோக்கி நிற்கிறது! உவமை நயம் சிறந்து விளங்குகிறது அன்றோ?

—"எழில்"

தென்றல் நண்பர்கள் எதிர்பார்த்திருந்த காவியம் வெளிவந்துவிட்டது!

மாங்கனி

கண்ணதாசன்
— பாடியது —

★ காதற் காவிய வரிசையில் ஒரு மகத்தான படைப்பு
★ சிறையில் மலர்ந்த செந்தமிழ் மலர்
★ கண்ணதாசன் எழுதிய முதற் காவியம்.

விலை ரூபாய் 2

வெளியிட்டோர் :
நீலா பப்ளிகேஷன்ஸ்,
தியாகராயநகரம் : : சென்னை 17.

"போற்றுபவர் போற்றட்டும் புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும் ; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதோரு கருத்தை என(து) உள்ளம் என்ருல்
எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன் ; அஞ்சேன் !"

எண்ணம்

மலர் 2 | 3-4-56 | இதழ் 42

சட்டசபையில் குடிலன்!

ஜனநாயகத்தின் அங்கம் என்று கருதப்படும் சென்னை சட்டசபையில் மார்ச் 29-ம் தேதி மொழிவழி மாநிலம் பற்றிய மசோதா வாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. மக்கள் தலைவர்கள், மக்களின் கருத்தை சட்டசபையிலே திறப்பட எடுத்துக் கூறியிருக்கிருர்கள். அதற்கு நிதியமைச்சர் தந்த பதில் :—

"காங்கிரஸ் கட்சியானது தனது முடிவுகளை பொதுமக்கள்மீது திணிப்பதாக குற்றம் சாட்டப்பட்டது. அவ்வாறு குற்றம் சாட்டுவது அனுதாபமற்ற போக்கையே குறிக்கிறது. தேசிய விஷயங்களில் இம்மாதிரி கட்சி ரீதியில் பேசவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

"ஒரு தகராறில் மூன்ரும் தரப்பினரின் முடிவை ஒப்புக்கொள்ளாமல் சர்ச்சை செய்துகொண்டே போனுல் தகராறுக்கு முடிவே கிடையாது, குழப்பம்தான் நிலவும். ஆகவேதான் நாட்டின் நலனை கருதி தீர்ப்புக் கூறப்பட்டது.

"ஆகவே, இத்தகைய விளைவுகளையெல்லாம் ஆராயாது, தமிழரல்லாத மக்களை விரட்ட வேண்டுமென்று கூறுபவர்கள், தமிழர்களின் நண்பர்களா என்று கேட்கிறேன். மலையாளிகளை மட்டும்தான் விரட்ட வேண்டும் என்று கூறுவதாக வாதிக்கலாம். அப்படியென்ருல் கன்னடியர்கள் பற்றி என்ன? ஒருவரின் நண்பராயிருப்பதற்கு, மற்றவர்களைத் திட்ட வேண்டுமென்று எண்ணுகிருர்கள். அவ்வாறே நடந்துகொள்கிருர்கள். பிராம்மணரல்லாதாரின் நலன்களைப் பாதுகாக்க வேண்டுமென்ருல் பிராம்மணர்களைத் திட்ட வேண்டும் என்று நினைக்கிருர்கள். இது மனிதத்தன்மை வாய்ந்த போக்கு அல்ல. இது காட்டுமிராண்டிப் போக்கு. இத்தகைய போக்கினுல் பலன் ஏற்படாது. இது தமிழர்களுக்கே அவமானம். இத்தகைய போக்குள்ள தலைவர்களிருப்பதுமானக்கேடான விஷயம். இத்தகைய போக்குக்கு அறியாமை தான் காரணமா என்று தெரியவில்லை. தமிழ்நாடு தமிழருக்கே என்ற கோஷம் தமிழருக்கு நன்மை செய்யாது. தீங்கே விளைவிக்கும். எதிர்ப்புக்கோஷங்கள் பலனளிக்கமாட்டா.

"எப்படியாயினும் நாம் இங்கு இந்தியர்களாகவே வாழவேண்டும், இங்குள்ள எல்லோரையும் விரட்டிவிட்டு நாம் ஜீவிக்க முடியாது. அது அசாத்தியம். ஆகவே தமிழர்களுக்கு தமிழ்நாடு என்ற மனப்பான்மையில் வாழ வேண்டாம், அது போலி கோஷம். தேவிகுளம், பீர்மேடு சென்னை ராஜ்யத்தில் இருக்கவேண்டுமென்பதுதான் என் கருத்தும். ஆனுல் பல அம்சங்களையும் அலசிப் பார்த்து மத்திய சர்க்கார் அவற்றை கேரளத்துடன் இருக்க வேண்டுமென்று தீர்மானித்துவிட்டார்கள்.

"இந்த சென்னை ராஜ்யத்திற்குத் 'தமிழ்நாடு' என்று பெயரிட வேண்டுமென்று சிலர் வற்புறுத்திக் கூறினர். இது விஷயத்தில் உணர்ச்சி வசப்பட்டே அவர்கள் பேசினுர்களே தவிர வேறென்றுமில்லை. இப்படி மாற்றுவதால் மக்களின் உணர்ச்சிகளை அது எவவளவு தூரம் திருப்தி செய்யுமென்று எனக்குத் தெரியவில்லை. இந்த நாட்டுக்குத் தமிழ்நாடு என்று எந்தக் காலத்திலுமே பெயர் இருந்ததில்லை. பாண்டிய நாடு, சேரநாடு, சோழநாடு, தொண்டை மண்டலநாடு என்றெல்லாம் இருந்திருக்கின்றனவேயொழிய தமிழ்நாடு என்று எந்தக் காலத்திலும் இது அழைக்கப்பட்டதில்லை.

"திராவிடநாடு பற்றியும் சிலர் பிரஸ்தாபித்தார்கள். திராவிட நாடு என்ருல் என்ன ? கன்னடம் மலையாளம், தெலுங்கு, தமிழ் இந்த நாடுகளெல்லாம் சேர்ந்ததுதான் திராவிட நாடு. மனதில் ஒரு உறுதியான நம்பிக்கை கொண்டு அவர்கள் அது பற்றிப் பேசவில்லை. இதெல்லாம் தேர்தல் தந்திரம். அரசியல் சூழ்ச்சியைக் கொண்டுதான் இத்தகைய கோஷங்களை அவர்கள் கிளப்புகிருர்கள்.

"தமிழர்களின் நலன்களை நீங்கள்தான் காப்பாற்றுகிறவர்கள் என்று எண்ணிக்கொள்ள வேண்டாம். தமிழர்களிடம் எங்களுக்கும் உங்களைவிட அக்கரை உண்டு.

மேலும் கேரளத்தை மலையாள நாடு என்று அழைக்க வேண்டுமென்று கூறுகிருர்களா? மைசூரை கன்னட நாடு என்று அழைக்க விரும்புகிருர்களா ? அதேபோல் தெலுங்கர்களும் தங்கள் நாட்டுக்கு தெலுங்க நாடு என்று பெயர் வைக்க விரும்புகிருர்களா ? இவர்களுக்கெல்லாம் தங்கள் பாஷையில் அபிமானமில்லை என்று நீங்கள் சொல்லிவிட முடியுமா ? எனவே, பாஷைப் பற்று எல்லோருக்கும் இருக்கிறது. இருக்கவேண்டியதுதான். ஆனுல், பெயரை மாற்றுவதற்கும் மொழிப் பற்றுக்கும் சம்பந்தமில்லை. இம்மாதிரி பெயரை மாற்றிவிட்டால் ஏதாவது அனுகூலமுண்டா ? அப்படி அனுகூலம் ஏதாவது இருக்குமாகில் அதை மாற்றுவதற்கு நானே முதலில் நிற்பேன். ஆகவே இது பற்றி அநாவசிய சர்ச்சை வேண்டாம் என நண்பர்களைக் கேட்டுக்கொள்கிறேன். சென்னை ராஜ்யம் என்ருல் எல்லோருக்கும் இப்பொழுதுநன்ருகத் தெரியும். அதைவிட்டு தமிழ்நாடு என்று அதை மாற்றினுல், கேட்பவர்களுக்கு இதுதான் பழைய சென்னை ராஜ்யம் என்று சொல்லிக்கொண்டேஇருக்க வேண்டிய நிலை ஏற்படும்."

தமிழ்நாடு எனப் பெயர் வைப்பது கூடாதாம் ! காரணம் காட்டிப் பேசுகிருராம் ! இதற்குமுன் தமிழ்நாடு என்று பெயர் இருந்தது இல்லையாம்! சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு என்று தானிருந்ததாம் ! எவனே அந்து முறிந்தவன் எழுதிய புத்தகத்தைப் படித்துவிட்டு ஆர்ப்பரிக்கிருர் சுப்ரமணியம். அவருடைய சூன்யபுத்திக்கு நாம் பரிதாபப்படுகிறேம். பட்டம்பெற்ற தமிழ் மந்திரி இவ்வளவு மட்டமான சிந்தனையும், தாயை பழிக்கும் இழிகுணமும் பெற்றிருப்பதற்காக பெரிதும் வருந்துகிறேம். சேர, சோழ, பாண்டியர் தனித்தனியாக ஆண்டுவந்தமையால் தான் தனித்தனியாக அழைக்கப்பட்டது என்றுகூட சப்ரமணியத்திற்குத் தெரியவில்லை ! அந்தோ பரிதாபம்! அவர் கல்வி அமைச்சர் ! குஷ்டரோகி டாக்டராக இருக்கிருர் என் செய்வோம். மேற்சொன்ன மூவேந்தர்கள் ஆண்டநிலப்பரப்புக்களின் மொத்தப் பகுதியை என்ன பெயரிட்டு தமிழர்கள் அழைத்தார்கள் 'தமிழ்நாடு'என்பதைத் தவிர. ஒரே மொழி பேசும் நாட்டில் பல ராஜ்யங்களென்ருல் அந்த நாட்டிற்கு அந்த மொழியின் பேரிலே தான்பெயர் இருந்திருக்கிறது உலகெங்கும்!

இதற்கு கல்வி-நிதி அமைச்சர் சுப்ரமணியம் சொல்லும் சமாதானம், அவருடைய மானங்கெட்ட தன்மையை, சுயமரியாதை அற்ற தன்மையை, காசுக்கு வயிறு வளர்க்குமடிமை புத்திமை,டில்லியின் பாதத்தை தாங்கத் துடிக்கும் அனுமார் உள்ளத்தை தமிழகத்துக்கு விளக்கி நிற்கிறது.

"தேவிகுளம், பீர்மேடு விஷயத்தில், அவற்றை கேரளத்துடன் இணைக்க வேண்டுமென்று மத்திய சர்க்கார் தீர்மானித்து விட்டார்கள்" என்கிருர் மந்த புத்திக்காரர், "தீர்மானித்துவிட்டார்கள்"-மத்தியசர்க்கார் என்ருல் பக்தர்கள் கூறும் 'தேவேந்திரன் சபை' என்று எண்ணிக்கொண்டு இனி அதை மாற்றமுடியாது என்ற தோரணையில் தீர்மானித்துவிட்டார்கள்; இனி என்ன செய்வது என்கிருர். 'அமிர்தசரஸ் கஷாயம் கைலாச வாசனை அப்படிக் கர்ணம் போட வைத்திருக்கிறது. கேவலம், இவரும் தன்னை மக்கள் தூதர் என்று பெருமையடித்துக்கொள்கிருர். பட்டுக்குஞ்சம் கட்டிக்கொள்கிருர். சென்னை ராஜ்யம் என்ருல் எல்லோருக்கும் தெரியுமாம்!தமிழ்நாடு என்று பெயரிட்டால் 'முந்திய சென்னை ராஜ்யம்' என்று சொல்ல வேண்டி வருமாம்! இத்துப்போன கொள்கைகளைப் பிடித்துக்கொண்டு கதறுகிருர். டில்லிக் கட்டெறும்பு இவர் காதைக் குடைகிறது.அதனுல் தான் சென்னை சட்டசபையில் பொய்க்கால் குதிரை ஆட்டம்போடுகிருர் மந்திரி.

மொழி தமிழ் என்பதாலேதான் 'தமிழன்' என்ற சொல் பிறந்தது. இனி ஒருவேளை சுப்ரமணியம் தன்னை "சென்னையன்" என்றுதான் அழைத்துக்கொள்வார். அவர் தமிழரல்ல! தமிழ்நாட்டுக் காரருமல்ல! சென்னையன்! "தமிழன் என்று சொல்லடா, தலைநிமிர்ந்து நில்லடா" என்று அவரைச் சார்ந்த கவிஞர் பாடியதையே அவர் மறந்திருக்கிருரே! அது மட்டுமா? தேசியக்கவி என்று போற்றப்படும் பாரதியின் பாட்டுகளைக்கூட அவர் எண்ணிப் பார்க்கவில்லையே! பிறகெப்படி அவர் தமிழராவார்! தாயை வெட்டிக்கொன்ற பரசுராமன் வாரிசு என்று அல்லவா அவர் தன்னை சொல்லாமல் வெளிக்காட்டிக் கொண்டிருக்கிருர். தமிழகத்தில் கெட்டழிந்து திரியும் அவமானச் சின்னங்களின் முன்னேடியிடம் தன் மானத்தை எதிர்பார்ப்பது பேய்விழி ஆந்தையிடம் பண்ணிசையை எதிர்பார்ப்பதுபோன்றது தான்,

ஆத்திரக்காரர்களும், அவசரபுத்தி கொண்டோரும் பெரும் பகுதிச் சிக்கல்களில் எதிர்க்கட்சிக் காரர்களின் வாதத்தை தங்களை அறியாமல் ஒப்புக்கொண்டு விடுகிருர்கள். 'புத்திசாலி' சுப்ரமணியம் இதற்கு நமக்குச் சான்ருக நிற்கிருர். 'திராவிடநாடு' என்பது தேர்தல் சூழ்ச்சி என்கிருர். மக்களை ஏமாற்றுவது என்பது, மக்கள் விரும்புவதைச் சொல்லுவதுதான் அமைச்சரின் அறிவு சார்ந்த(!) வாதப்படி பார்த்தால் திராவிட நாட்டுப் பிரிவினையை மக்கள் விரும்புகிருர்கள் என்று தானே பொருள் ! திராவிட நாடு தேர்தல் சூழ்ச்சி என்ருல், மக்கள் அதை நம்பி வாக்களிப்பார்கள் என்கிருர். அப்படியானுல் மக்கள் அதை நம்புகிருர்கள் என்பதைத் தவிர வேறு பொருள் கொள்ள வழியில்லை. இவ்வளவு நடந்த பிறகு- மக்களின் கருத்தை அறிந்தபின்பு, உண்மையான ஜனநாயகவாதி யாராயிருந்தாலும் தங்களின் [illegible] சரிதத்தை தாங்களே முடித்துக் கொண்டுவிடுவார்கள். போலி ஜனநாயகவாதியாக இருந்தாலும் எங்காவது ஓடிவிடுவார்கள். சுப்ரமணியம் இதில் எந்த வகையிலும் சேர்க்கத் தகுதியற்றவர். ஏனென்ருல் அவர் இன்னும் இருக்கிருர் மனிதராகக்கூட அல்ல ! மந்திரியாக! வெட்கம்! வெட்கம்! மானங்காத்த மறவர்குலம் சிரிக்கிறது! நாம், மனேன்மணியத்தில் வரும் மந்திரி குடிலன் கதையை அவருக்கு நினைவூட்டுகிருேம்.

"நீங்கள் காலை எத்தனை மணிக்கு எழுந்திருக்கிறீர்கள்?"
"என் அறை ஜன்னலுக்குள் வெய்யில் வந்ததும்!"
"அவ்வளவு சீக்கிரமா?"
"என் ஜன்னல் மேற்குப் பக்கம் பார்த்தது!"

"தூய உள்ளமே கோயில். நலிந்தோரைத் தேற்றுவதே தோத்திரம் ! மக்கட்பணியே மகேசனுக்கு உகந்த பூஜை ! ஏழைகள் இதயத்தில் களிப்பூட்டும் பணிபுரிதலே பகவானுக்குத் தேர் ! திருவிழா ! யாவும்"

அறிஞர் அண்ணா.

தோற்றாள் துறவி

தென்னரசு

— சென்ற இதழ் தொடர்ச்சி —

வேல்முருகனை நினைத்து வேண்டற்பா பாடி முடித்தார் ஜெகநாதர். அதுவரையிலுமா சாகாமலிருப்பான் ஞானபண்டிதன் ! திகைத்தார் துறவியார். கோபியைக் குருதேவர் திருத்தப்போனால் அவள் தன்னைப்பற்றி குருஜீயிடம்சொல்லிவிடுவாளே என்ற பயத்தினால்தான் கிணற்றில் விழுந்தான் என்பது. ஜகநாதருக்குப் எப்படித் தெரியும்? உண்மைச்சீடன் ஒருவன் மறைந்தான் என கண்ணீர் வடித்தார்.

சீடர்களுக்குள், இனி யார் பிரதம சீடன் என்ற போட்டி அரும்பு விட்டது. ஞானத்தின் சடலம்கூட மயானத்திற்குப் போகவில்லை; அதற்கிடையே இந்த நாடகங்களெல்லாம் ! முற்றும் துறந்தவர்கள் மத்தியில், கற்றறியாதவர்களிடையேகூட நடைபெற முடியாத எத்தனையோ அநாகரிகச் செயல்கள் நடந்தேறிவிடுகின்றன. யார் பெற்ற மகனோ? பேர்பெற்ற தாயகத்திற்கு உழைக்கவேண்டிய பருவத்தில், கழுத்திலே கயறும், நெற்றியிலே பட்டையும் பூண்டு கருகிப்போனான். ஆனால் துறவி, 'திருச்சிற்றம்பலம் ! இனி யார் எனக்கு எடுபிடி' என்று கேட்கிறார். துறவிகள் வேறு எதையும் துறந்துவிடவில்லை. அன்பையும், மனிதாபிமானத்தையும்தான் முதலில் துறந்துவிடுகிறார்கள். மடத்தின் பெயரால் மக்களின் உதிரத்தை செல்வமாக்குவதும், மனிதர்களை வைத்து மனிதர்களே பல்லக்குத் தூக்கவேண்டுமென்று கட்டளை பிறப்பிப்பதும் சடையுடைச் சாமியார்கள் தானே !

★

"கோபி ! கிராமத்தின் தூய்மையைக் கெடுக்கிறாள் ! தாசி! சை! தூர்த்தை ! தூர்த்தை !!" அன்று பகல் முழுதும் இப்படியே புலம்பிக் கிடந்தார் துறவி.

அந்தி சாய்ந்தது. கோபியை சந்திக்கத் தூதனுப்பினார் ஜகநாதர். அந்த மான் விழியாள் "மகான் வரக் கிடைத்தது" எனத் தோகை விரித்தாடினாள். கண்ணுக்கு மை தீட்டினாள் ! மதிமுகத்திற்கு மாப்பூசினாள். காஷ்மீர் பட்டுடுத்தி கழுத்திலே வைரமாலை பூட்டி, கார் கூந்தலில் நறுமணம் சேர் மலர் சூட்டி காத்துக்கிடந்தாள் ஜகநாதர் தரிசனத்திற்கு.

இரவு ஏழு மணி இருக்கும். மெழுகுசீலை போர்த்தப்பெற்ற வில் வண்டியிலிருந்து இறங்கி கோபியின் மாளிகைக்குள் நுழைந்தார் ஜகநாதர். பட்டுவிரித்த தரை — மொட்டவிழ்த்த மல்லிகை மலர் தூவிய கண்ணாடிக்கட்டில் — தங்கத் தட்டு நிறைய துளிர் வெற்றிலை, வர்ணச் சுண்ணாம்பு, வாசனைப் பாக்கு ! —வரவேற்புக்கூடம் இந்த அலங்காரத்தில் இருந்தது. ஜகநாதர் நெற்றியைச் சுழித்தார், புருவத்தை வளைத்தார் ! செல்லப் பிள்ளைகளாலும், வாழ்க்கையில் கஷ்ட நஷ்டங்களை அடைந்திராத சோம்பேறிகளாலும் ஆத்திரத்தை அடக்க முடிவதில்லை. ஜகநாதர் துன்புறுத்தப்பட்ட கருநாகத்தைப் போல சீறினார். இன்முகம்காட்டி இருகை நீட்டி வரவேற்ற 'கோகுல தாசி'யை வசைபாடினார்.

"சீ! சீ! சீ!! உன் வீடு புகுந்தது, உன்னை என் பசிக்கு இரையாக்கிக் கொள்ள அல்ல ! கோபி ! இன்பக் கடை நடத்தி இளைஞர்களை மகிழ்விப்பதாக எண்ணிக்கொள்ளாதே! பரமனின் தீராத கோபத்திற்கு ஆளாகிவிட்டாய்! பரமண்டலத்தில் உன்கதி என்னாகுதோ? போ ! பாதகாணிக்கை வைத்து பரமபிதாவிடம் பிராயச்சித்தம் தேடிக்கொள்! போ! உம்! இன்றே அந்த காரியத்தைச் செய்து கரையேறிவிடு !" ஜகநாதர் கனல் கக்கினார். கண்கள் கொதித்திருந்தன. ஆத்திரத்தின் பிரதிபலிப்பு அவருடைய உதடுகளின் துடிப்பில் தெரிந்தது.

"பிரபு, என்னை என்ன செய்யச் சொல்கிறீர்கள் ? ஏழைத்தாசி ! அதுவும் குலத்தொழில்! இதுவும் ஒரு திருச்சேவை தானே என்று கருதினேன் ! தேவதாசிகள் ஆண்டவர்களின் அடியார்கள் தானே பிரபு ?" என்று தாழ்ந்த குரலில் பதில் சொன்னாள் கோபி. கோபியின் சமாதானம் ஜகநாதரின் செவிகளில் ஏறவில்லை.

"தாசிப் பெண்ணே, நல்ல ஊரைக் கெடுத்தாள் கோபி என்ற பழிச்சொல்லுக்கு ஆளாகாதே ! குழிப்புண்ணைக்கூட ஆற்றிவிடலாம். பழிச்சொல்லை அழித்திட எவராலும் முடியாது ! அதுவும் நீ தாசி ! கவனமிருக்கட்டும்"

"அடியேனை மன்னித்துவிடுங்கள் ! ஆனால் ஒரு விண்ணப்பம் ! நான் கரையேறிவிட்டால் போதுமா? சீமான்கள் வந்து என்னைத் தொல்லைப்படுத்தினால் எனக்கு தற்காப்பு இல்லையே சுவாமி? தனிக்கட்டை ! தப்பிக்க வழி ?"

"ஏன், தாசித் தொழிலை நீ விட்டுவிடத் துணிந்த பின்பு உனக்கு இந்த ஆடை ஆபரணங்கள் ஏன் ? பொன்னணி பட்டாடைகளை ஏழைகளுக்குக் கொடுத்துவிடலாமே ! பூமணக்கும் இந்த பங்களாவை மடத்து பெயருக்கு எழுதி வைத்துவிட்டு நீ கன்னிமாடத்திற்குப்போய் விட்டால்? எவன் வருவான் அங்கே? எல்லாம் என் அப்பன் முருகன் இருக்கிறான் ! அஞ்சேல்!" என்று ஆறுதல் கூறினார் ஜகநாதர்.

கோபிக்கு மெய்சிலிர்த்தது. ஆண்டவனே ஜகநாதர் உருவில் தன் இல்லம் வந்துவிட்டதாக அவள் எண்ணிப் பூரித்தாள். சாமியாரின் வில்வண்டி மறையும் வரை ஜன்னல் திரையை விலக்கிக் கொண்டு விழிகொட்டாமல்பார்த்து நின்றாள். ஏனென்றால் குருஜியின் பெருமையை அடிக்கடி ரகசிய விஜயம் செய்த ஞானபண்டிதன் அவளிடம் கூறியிருக்கிறானே !

தெருமண்ணைத் தொட்டறியாத அவளுடைய பட்டுமலர்ப் பாதத்தில் இதுகாறும் ஒட்டிக்கொண்டிருந்த சைனாதேசத்து ரப்பர் மிதியடி கழட்டி எறியப்பட்டது. பொற்சதங்கைகள் அவளுடைய கால்களிலிருந்து விடுதலைபெற்றன. மாங்காய்மாலை, மையத்தில் நீலம் பதித்த வைரத்தோடு, நெற்றித் திலகம், நெளிமயிர்த் தைலம்— இவைகளில் எதையும் அவள் விரும்புவதில்லை இப்போது. உள்ளத்தைக் காட்டும் வகையில் தும்பைப்பூ நிறப்புடவை. நெற்றியிலே விபூதிப்பட்டை, கழுத்திலே தங்கப்பூண் பிடித்த உத்திராக்கம். இளம்பெண் — இன்பத்தில் திளைத்துக்கிடந்தவள்—இப்போது துறவுக் கோலம் பூண்டுவிட்டாள். துறவி ஜகநாதரின் இந்தச் சாதனையை ஊரே புகழ்ந்தது. ஆனால் சன்னிதானத்திற்கு வருமானம் குறைந்துவிட்டது. பிரபுக்களின் பகை கிளம்பியது. "கோபி கவலைதீர்க்கும் மாமருந்தாக இருந்தாள். உலக வாழ்வுக்கு இனிப்பூட்டும் இன்பச் சுனையாக விளங்கினாள். அவளின் உறவு எங்களுக்கு தொழிலில் ஆர்வமூட்டி வந்தது. இப்போது அவள் கன்னிமாடத்திலே ! எல்லாம் ஜகநாதரின் வேலை. இனி மடத்திற்குக் காணிக்கையாவது மண்ணாங்கட்டியாவது !" என்று, இதுகாறும் உண்டியலில் பணம் போட்டு வந்தவர்கள், பணம் கொடுத்து பாவ மன்னிப்புச்சீட்டுப் பெற்றவர்கள் எல்லோரும் ஜகநாதருக்கு எதிர்முகாமமைத்தனர். இந்த எதிர்ப்புக் குரலின் ஒலியைக் காட்டிலும் கோபி முருகனை நினைத்து திருப்புகழ் பாடும் பக்திப் பாட்டின் ஒலி பெரிதாக இருந்ததால் ஜகநாதர் வெற்றிக் களிப்பிலேயே இருந்தார்.

கோபி மடத்திற்கு வந்து மூன்று மாதங்கள் முடிந்துவிட்டன.

பதவி உயர்வு திறமைசாலிகளுக்கும் கிடைக்கிறது, உச்சியிலிருப்போரின் அன்பைப்பெற்றவர்களுக்கும் கிடைக்கிறது. இதில் கோபி கன்னிமாடத்தின் தலைவியானது எந்த முறையிலோ தெரியவில்லை. அவள் தலைவி இப்போது ! காலையிலும் மாலையிலும் நிஷ்டையிலிருந்து எழுந்துவந்து கன்னிமாடப் பெண்களுக்கு உபதேசம் புரிந்தவந்த ஜகநாதர் இப்போது கன்னிமாடப் பகுதிக்கே வருவதில்லை. கன்னிமாடத்தின் அத்தனை பொறுப்பும் கோபியைச் சார்ந்ததாகிவிட்டது.

வேளைக்கொரு வாலிபனோடு கொஞ்சித் திரிந்த அழகி கோபி, வேதாந்த வாழ்வு தொடங்கியபின் அவள் அழகு என்னவாகி இருக்கும் என்று கவலைப்பட்டோர் ஏராளமுண்டு. ஆனால் அவளுடைய கட்டழகு கரைந்து விடவில்லை. குளிர் நிழலில் குந்தியபடி, கூந்தலைக் கோதிக்கொண்டு, குதித்தோடி வரும் ஆசைப் பெருவெள்ளத்தை எப்படியோ அணைபோட்டுத் தடுத்துக்கொண்டாள். ஆனால் அவள் மேனி பந்தயக்குதிரைபோல் மின்னலிட்டது. கண்டோர் காமுறும் வண்ணம் முன்னைக் காட்டிலும் வனப்புப் பெற்றிருந்தாள் கோபி.

"குருநாதர்தான் இப்போதுகன்னிமாடத்திற்குப் போவதில்லையே ! நாம் போனால் என்ன ?" என்று ஜகநாதரின் சீடர்கள் கன்னிமாடத்திற்கு வந்துபோக ஆரம்பித்தார்கள். பூப்பறிக்க வருவது போல வர ஆரம்பித்தவர்கள் படிப்படியாக கன்னிமாடப் பெண்களோடு சரசம் செய்கிற அளவுக்கு வந்துவிட்டார்கள் ! இது கோபிக்குப் பிடிக்கவில்லை. தாசி கோகிலம் அவளுடைய இதயத்தைத் தூக்கி எறிந்துவிட்டு துறவி கோகிலமாக அல்லவா வாழ்கிறாள் ! மதம்பிடித்தலையும் மடத்து இளைஞர்களின் போக்கு அவளுக்கு எப்படிப் பிடிக்கும். எப்படியாவது இந்தச் சம்பவங்களை குருநாதரிடம் சொல்லிவிடுவது என்று முடிவுகட்டி அன்று மாலை ஜகநாதரின் மூன்றாவது மாடிக்குக் கிளம்பினாள். சேவடி

— 10-ம் பக்கம் —

விற்பனையாகிறது !

தென்னரசு

எழுதிய

தேவாலயம்

[புதிய நாடகம்]

விலை ரூ. 1-4-0

கிடைக்குமிடம் :

அருணோதயம், சென்னை - 14

நீலா நிலையம், சென்னை – 6.

வெண்பாப் போட்டி 27

இஷ்டம்போல் எழுதுக.

வெண்பாப் போட்டி நண்பர்களின் கற்பனை காட்டாற்று வெள்ளம்போல் ஓட ஒரு வாய்ப்பு. நல்ல காதல் வெண்பாவாக ஒன்று எழுதி அனுப்புக. தலைவி தோழிக்குச் சொல்வதாகவோ, தோழி தலைவிக்குச் சொல்வதாகவோ கலவிபற்றியோ, புலவிபற்றியோ எதைப்பற்றி வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம்.

முடிவு தேதி 17-4-56

முகவரி:— வெண்பாப் போட்டி,
தென்றல்,
சென்னை-6

★ காதல் பாதை - ஒரு விளக்கம் ★

“காதல் பாதை என்பது காட்டுப் பாதையைப் போன்றது: கல்லும், முள்ளும் நிரம்பியது; கரடு முரடானது” என்றெல்லாம் கதைகளில் படிக்கிறோம்: திரைப்படக் காதலன் தன் காதலியிடம் கூறக் கேட்கிறோம்.

ஆனால், காதல் பாதைக்கு ஏன் காட்டுப்பாதை உவமையாகக் கூறப்படுகிறது? காரணம் பலருக்குத் தெரியாது.

விளக்கமறிபவர்கள் வியப்படைவார்கள். இயற்கையிலே ஒன்றிய இன்தமிழின் இயல்பை எண்ணி எண்ணிப் பெருமிதங் கொள்வர்.

“நாடு” என்று பொதுவாகச் சொல்லும் பொழுது, ஒரு நாட்டிற்குரிய நிலத்தின் அளவையும், அதில் வாழும் மக்களையும் சேர்த்தே பொருள் கொள்கிறோம். ஏனெனில், நிலமின்றி மக்கள் வாழ முடியாது. மக்கள் இல்லாத நிலமும் ‘நாடு’ என்று ஏற்றுக்கொள்ளப்படாது.

‘நாடு’ என்பதற்கு விளக்கம் கூறப் புகுந்த ‘வில்சன்’ என்னும் அரசியல் கலை வல்லுநனும் “சட்டத்திற்குக் கட்டுப்பட்டு வாழும் மக்களைக் கொண்ட வரையறுக்கப்பட்டநிலமே ‘நாடு’ எனப்படும்” என்று கூறுகிறான். எனவே, நிலமும், மக்களும் ஒருசேரப் பெற்றதே நாடாகும். இதையே ‘சீமை’ என்று பாவாணர் குறிப்பிடுவார்.

நிலத்தின் அளவு - ஒரு சில பொழுதில் தவிர - நிலையானதாகவே இருக்கும். மக்கட் தொகையின் அளவு அப்படிப்பட்டதல்ல. அது நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே போகும் தன்மையது. குறிப்பிட்ட காலங் கழித்து ஒரு நாட்டின் மக்கட் தொகை இந்த அளவுக்குப் பெருகும் எனபது உண்மையானால், குறிப்பிட்ட காலத்திற்கு முன்னால் அந்நாட்டின் மக்கள் தொகை குறைந்தே இருந்திருக்கும் என்பதையும் மறுக்க முடியாது.

இவ்வகையில் பார்க்கும் பொழுது, சங்க காலத்திலும், அதற்கு முன்பும் தமிழ் நாட்டின் மக்கள் தொகை மிகுந்த அளவில் குறைந்தே இருந்தது. மக்கள் நெருக்கம் மிகுந்த இக்காலத்தில், மக்கள் வாழும்குடில்களும், வீடுகளும் பெருகிவிட்டதால், ஊர்களும் நெருக்கமாக அமைந்துவிட்டன; காடுகளெல்லாம் திருத்தப் பெற்று கழனிகளாகின்றன; நிலத்தின் அளவு மாறுமலிருக்க, ஊர்கள் மட்டும் பெருகிய காரணத்தால், ஊர்களுக்கிடையேயுள்ள தொலைவும் குறைந்துவிட்டது.

இதே முறையில் நோக்குமிடத்து பழந் தமிழகத்தில் மக்கள் நெருக்கம் குறைந்திருந்த காரணத்தால், ஊர்களும் நெருக்கமாக இல்லாமல் அங்கொன்றும் இங்கொன்றுமாக அமைந்திருந்தன. ஊர்களுக்கிடைப்பட்ட தொலைவும்மிகுந்திருந்தது. கழனிகள் குறைந்து, நிலமெல்லாம் பண்படுத்தப்படாமல் காடுகளே மிகுந்திருந்தன. எனவே, பண்டைய நாட்களில் ஒரு ஊரிலிருந்து மற்றோர் ஊருக்குச் செல்வதாயின், மிகுதியான தொலைவைக் கடக்க வேண்டியிருந்தது. அதிலும் கடக்கவேண்டிய பகுதிகளில் மிகுதியும் காடுகளே நிறைந்திருந்தன.

‘காடு’ என்றால் அது கரடு முரடாய்த்தானிருக்கும். கல்லும் முள்ளும் நிரம்பப் பெற்றுத்தானிருக்கும் என்பது கண்கூடு.

இது பழந்தமிழகத்தின் நாட்டு அமைப்பு. இனி, அன்றைய நிலையில் ‘காதல்’ எவ்வாறு போற்றப்பட்டது என்பதைக் காண்போம்.

★ ★ ★

சேலம் கல்லூரி தமிழ்த்துறைத் தலைவரும். பன்மொழிப் புலவருமாகிய பேராசிரியர் திரு. ஞா. தேவநேயப் பாவாணர் எம். ஏ. அவர்கள் பழந்தமிழகத்தின் காதல் நிலை’யைப் பற்றி ‘தோல்காப்பிய வதுப்பு’ ஒன்றில் கூறியவற்றை அடிப்படையாக வைத்துத் தீட்டப்பெற்றது இக்கட்டுரை.

★ ★ ★

தலைவனும், தலைவியும் காதல் கொள்ளும் முறையைப்பற்றியும் அக்காதலின் தன்மையைப்பற்றியும், அது வளரும் வகைபற்றியும், அதன் முடிவைப்பற்றியும் பழந் தமிழ் நூல்கள் பல (எ. டு: தொல் காப்பியம், அகநானூறு) விளக்கமாகக் கூறியுள்ளன.

தலைவன் தலைவியை முதன் முறையாகக் காண்கிறான். கண்டதும், இவள் “போதோ விசும்போ - புனலோ......மாதோ மடமயிலோ” (திருக்கோவை, 1) என்று திகைத்து நிற்கிறான். தலைவியும் அவனைக் காதல் கனிய நோக்குகிறாள். இருவரும் தமியராகின்றனர். (தமியராதலென்பது தம்முணர்வினரல்லராதல்”;) தலைவி’ தன் தோழியை விளித்து “இவன் மகனேதோழி’ (முடக்கொற்றனார் பாடிய அகப் பாட்டினுள்) என்று தலைவனைக் குறித்துக் கொள்வதன் மூலம் தான் கொண்ட காதலைக் குறிப்பாகத் தோழிக்கு உணர்த்துகிறாள். சமயம் வாய்த்தபொழுது தோழி தலைவியினுடைய காதலைச் செவிலித் தாயின் மூலம் தலைவியின் பெற்ற தாய் அறியச் செய்கிறாள். தலைவி கொண்ட காதலுக்குப் பெற்றோர் இசைவரேல் திருமணம் நிகழும். இல்லையேல், காதலர் இருவரும்‘உடன் போக்கு’ முறையைக் கைக் கொள்வர்.

பெற்றோரின் விருப்பத்திற்கு மாறாக, தலைவன், தன் காதற் கிழத்தியை அழைத்துக்கொண்டு பிறர் அறியா வண்ணம் வேற்றூர் சென்று, அங்கு அவளை மணம் புரிந்து வாழும் முறையே ‘உடன் போக்கு’ எனப்படும்.

எக்காலமாயினும் சரி, எந்நாடாயினும் சரி, பெரும்பாலான காதலர்களுக்குப் பல தடைகள் ஏற்பட்டன. பெற்றோர்களுக்குத் தம் மக்கள் மேலுள்ள பேரன்பே அந்தத் தடைகளுக்குக் காரணம் என்றுகூடக் கூறலாம். இருவர் காதல் கொள்ளுமிடத்து, தம் மகனுக்கு வாய்த்த மங்கை நமக்கேற்றவள்தானா என்று மகனுடைய பெற்றோர்கள் எண்ணுவதும், தம் மகளுக்குக் கிடைத்த ஆண் மகன் எத்தகையவனோ என்று மகளைப் பெற்றோர் ஐயப்படுவதும் இயல்பு. இந்தக் காரணத்தாலேயே தம் மக்களுடைய காதல் வாழ்வினையும் தடைசெய்ய முனைகின்றனர். அது மட்டுமன்றி, சமுதாய அமைப்பும், சாதி முறைகளுங்கூட இளங் காதலர்களுக்குப் பெருந் தடைகளை ஏற்படுத்தி வந்தன. இதற்குப் பழந் தமிழகம் மட்டும் விதி விலக்காயிருக்கவில்லை.

எனவே, காதல் நிறைவேறாத காரணத்தால் மன முடைந்து போன காதலர்கள் பலர் அப்பொழுதும்இருந்திருக்கின்றனர். தங்கள் காதல் வாழ்வு நிறைவுறவும், நிறைவேறவும் ‘உடன் போக்கு’ முறையைக் கைக் கொள்வதே இவர்கள் வழக்கமாகவுமிருந்தது.

இது பழந் தமிழகத்தின் காதல் நிலை!

இப்பொழுது சற்றே கற்பனையை அவிழ்த்து விடுங்கள்.

தலைவன் ஒருவன் தன் தலைவியுடன், தம் பெற்றோர்களுக்குத் தெரியாமல் ‘உடன் போக்கு’ முறைப்படி வேற்றூர் புறப்படுகிறான். அவர்களது ஊரிலிருந்து மற்றோர் ஊருக்குச் செல்லுங்கால், மிகுதியான தொலைவைக் கடக்க வேண்டியிருக்கிறது. வழியில் தங்கள் துன்பத்தைக் குறைத்துக் கொள்ள தேவையான பொருட்களை (குடை, மிதியடி போன்றவை) எடுத்துச் செல்லவும்இயலாது. ஏனெனில், தேவை எது, தேவையற்றதுஎது என்று ஆராய்ந்துகொண்டிருக்க அவர்களது ‘விரைவு’ இடமளிக்காது. அதுவுமன்றி, பயணத்துக்குத் தேவையான பொருட்களை எடுத்துக்கொண்டு புறப்பட்டால், அது இருப்பவர்களுக்கு ஐயத்தைத் தோற்றுவிப்பதோடு காதலர்களது, முயற்சியையும் காட்டிக் கொடுத்து விடும்.

அடுத்து, அவர்கள் போக வேண்டிய ஊருக்குச் செப்பனிடப்பட்டப் பாதை அமைந்திருந்தாலும், அதன் வழியே செல்ல முடியாது. அப்படிச் சென்றால், “மீண்டாரெனவுவந்தேன்” (திருச்சிற்றம்பலக் கோவை, 244) என்று கூறித் தம்மைத் தேடிவரும் பெற்றோரின் பார்வையிலோ, மற்றோரின் பார்வையிலோ எளிதில் அகப்பட்டுக் கொள்வர். அதைத் தவிர்க்க குறுக்கு வழிகளையே- அதாவது காட்டுப் பாதைகளையே கைக்கொள்ள வேண்டியிருந்தது.

தலைவன் தன் காதலியை உடன் அழைத்துக் கொண்டு போகிறான். நடக்க வேண்டியதோ காட்டுப் பாதையில்! கல்லின்மேலும், முள்ளின்மேலும் கால் வைத்துச் செல்ல வேண்டியுள்ளது. செம்பஞ்சுக் குழம்பு திட்டப் பெற்ற சேயிழையின் சிற்றடிகளின் செந்நீர் பெருகுகிறது, அத்துன்பத்திலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள அவர்களிடம் தேவையான பொருட்களும் இல்லை, ஆகவே தன் காதலன் அடியெடுத்து வைத்த இடத்திலேயே காதலியும் தன் அடிவைத்து நடக்கிறாள்.

இவ்வளவு இடுக் கண்களுக்குப் பிறகே அவர்கள் வேற்றூர் செல்ல முடிகிறது. அங்கு மணம் புரிந்து, தங்கள் இன்ப வாழ்வைத் துவங்கவும் முடிகிறது.

இந்த வகையாக, பழந் தமிழகத்துக் காதலர்களின் பெரும்பான்மையினர் தங்கள் இன்ப வாழ்விற்கு முன்பு காட்டுப் பாதைகளைக் கடக்கவேண்டியேயிருந்தது. :காதலர் பாதை காட்டுப் பாதையே’ என்ற அந்தப் பொது நடப்பே ‘காதல் பாதை காட்டுப் பாதை’ என்று மருவி, “காதல் பாதை கரடு முரடானது” என்று ஒரு பழமொழியையே ஏற்படுத்திவிட்டது. என்னே தமிழின் மாண்பு!

—ஏ. பெரியசாமி.

உள்ளத்தைக் கவரும்
உயரிய நாவல்
கருணையவர்களின் கருத்து படையல்
கருணை உள்ளம்.
படியுங்கள், மகிழுங்கள்,
செல்வி நூற்பதிப்பகம்
சென்ட்ரல் மார்க்கெட் சந்து, மதுரை

மூவர்ணச் சினிமாப் படங்கள்
நடிகர் நடிகைகள், தி.மு.க. தலைவர்கள் விதவிதமான புதுப்புது அழகிய 3½ x 2½ சைஸ் மூவர்ண கலர்ப் படங்கள் 100 டிசைன்களுக்கு மேல் உண்டு. சாம்பிளுக்கு ரூ. 1, அனுப்பவும். 100 படங்களுக்கு விலை ரூ. 9-0-0 மட்டும். வி. பி. பி. செலவு இனம்.
நவ இந்தியா காலண்டர் கம்பெனி,
தபால் பெட்டி நெ. 132, மதுரை.

சிலம்பு [illegible] செல்வம்

கட்சி, இனம், கொள்கை கடந்து போற்றுதலுக்கும், தூற்றுதலுக்கும் இலக்காகியுள்ள ஏடு சிலப்பதிகாரம். ஆனால் இன்னொருபுறம் அதுவே கட்சி, இனம், கொள்கை கடந்து பாராட்டுதலுக்கும், புறக்கணிப்புக்கும் இலக்காகியுள்ளது. மேலீடாக பார்ப்பவர்களுக்குப் போற்றுவதும், பாராட்டுவதும் ஒன்று என்று தோற்றும். அதுபோல, தூற்றுவதும் புறக்கணிப்பதும் ஒன்று என்று புலப்படும். ஆனால் சிலப்பதிகாரத்தைப் புறக்கணிப்பவரிடையே அதைப் போற்றுபவர் உண்டு. போற்றுபவர் நோக்கம் வேறு, பாராட்டுபவர் நோக்கம் வேறு என்பதையும், தூற்றுபவர் நோக்கம் வேறு, புறக்கணிப்பவர் நோக்கம் வேறு என்பதையும் இது காட்டும்.

புறக்கணிப்புக் குழுவும் தூற்றுதல் குழுவும்

புறக்கணிக்கும் குழுவில் தலைசிறந்தவர் அண்மையில் காலம் சென்ற பெரியார் இராவ்பகதூர் வையாபுரிப் பிள்ளை அவர்களே யாவர். 'போற்றும் சிலர்' என்று அவர் ஒரு சாராரை ஒதுக்கிப் பேசினாலும், போற்றுவதிலேயே அவர் கிட்டத்தட்ட முதலிடம் வகிப்பராவர். சிலப்பதிகாரம் சங்ககாலத்து நூலல்ல என்பதை நிலைநாட்டுவதிலும், அது வரலாற்று நூலல்ல, கற்பனைக் காவியமே என்பதை உறுதி செய்வதிலுமே முழுக்கருத்துச் செலுத்தியவர் அவர். ஆனால் கலை என்ற வகையில் அது தமிழின் தலைசிறந்த நூல்களில் ஒன்று என்றும், தமிழர் பண்பாட்டை விளக்குவதில் அது ஒப்புயர்வற்றது என்றுமே அவர் கொண்டார்.

இதற்கு நேர்மாறாக தூற்றும் குழுவில் தலைமைவகிப்பவர் பெரியார் ஈ. வே. ராமசாமி ஆவர். குழுவின் வலுவும், ஆற்றலும் அவரே, ஆனால் அவர் கலைஞர் அல்ல. கலைக்கும் அவருக்கும் தொலைதூரம். கலைப்பக்கம் சாயாத, என்றும் சாயவிரும்பாத பகுத்தறிவு வாதி அவர். அவர் தோற்றுவித்த இயக்கத்திலேயே அறிஞர் உண்டு, கலைஞர் உண்டு, தமிழாராய்ச்சியாளர் உண்டு. ஆனால் இந்த தூற்றல் குழுவில் அவர்கள் இணையவில்லை. அதிலிருந்து ஒதுங்கியே நின்றனர், நிற்கின்றனர், நிற்பர். ஏனெனில் தூற்றல் குழுவின் நோக்கம் வரலாற்று ஆராய்ச்சி அன்று, கலை ஆராய்ச்சி அன்று, ஒரு கோட்பாட்டுக்கிணங்க நூல்களை மக்களிடையே தணிக்கை செய்வது மட்டுமே ஆகும்.

சிலம்புச் செல்வம் சங்க காலத்ததா, பிற்காலத்ததா என்பதிலோ; அது வரலாற்று நூலா, கற்பனைக்காவியமா என்பதிலோ தூற்றுதல் குழுவினருக்கு துளிகூட கவலை கிடையாது. அவர்கள் நோக்கம் இராவ்பகதூர் வையாபுரியின் நோக்கத்துக்கு நேர்மாறானது. சிலப்பதிகாரம் கலையல்ல; அழகிய கற்பனையல்ல; அது தமிழர் பண்பாட்டிற்கு சிறந்த இலக்கியமல்ல; அயல் பண்பாட்டிற்கு; அதுவும் தமிழுக்கு நேர்மாறான ஆரியப் பண்பாட்டிற்கு உரியது அது என்பதே அவர்கள் கோட்பாடு. இதை நிலைநாட்டுவதே அவர்கள் நோக்கம்.

பொருந்தாத்தலைப் பெரியார்களைப் பொருத்த முயலும் பேராசிரியர்

புறக்கணிப்போர்குழு, தூற்றுவோர்குழு ஆகிய இரண்டிலும் இடம் பெறும் விசித்திரப் பெருமை கொண்டவர் பேராசிரியர் வே. சு. சுப்பிரமணிய ஆச்சாரியார். இரு குழுவிலும் அவருடன் தொடர்பு கொண்ட இரு பெரியார்களும்–பெரியார் ஈ. வே. ரா. ஒருபுறமும், இராவ்சாகிப் வையாபுரிப் பிள்ளை மறுபுறமும்–வெறும் கருத்து வேறுபாடு மட்டும் உடையவர்கள் அல்லர்; தமிழகத்தில் பிறந்த இரண்டு உயிர்கள் என்ற பொது ஒற்றுமை தவிர வேறு எல்லா வகையிலும் அவர்கள் வேறுபட்டவர்கள், மாறுபட்டவர்கள்.

இருவரும் ஒற்றுமைப்படுவதற்குரிய பொதுப்பண்பும் எதுவும் கிடையாது; வேற்றுமைப்படுவதற்குரிய பொது நோக்கமும் எதுவும் கிடையாது. ஆயினும் இப்பொருந்தாத்தலைகள் இரண்டிற்கும் இடையே நின்று பொருத்தம் காண முயலுகிறார் பேராசிரியர்.

இதுமட்டுமன்று, இரு குழுவிலும் இடம்பெற்ற பேராசிரியர் இரு குழுவிற்கும் பிரதிநிதியாக நின்று இரு வேறு வகைப்பட்ட சிலப்பதிகார எதிர்ப்பு நூல்களை இயற்றித்தந்துள்ளார். 1947 ல் இராவ்சாகிப் அவர்கள் முன்னுரை, மேற்கோள்களுடன் ஆனந்தபோதினி பத்திராதிபர் திரு. நா. முனுசாமி முதலியார் அவர்களைப் பிரசுரகர்த்தராகக் கொண்டு வெளிவந்த 'சிலப்பதிகார ஆராய்ச்சி' என்ற நூல் புறக்கணிப்புக்குழுவின் கருத்தையே மேற்கொண்டது. சிலப்பதிகாரம் சங்க காலத்து நூலல்ல, பிற்பட்டது; அது வரலாற்று நூலல்ல, கற்பனைக் காவியம் என்று மட்டுமே அது வாதாடிற்று. அதன் அழகை, பெருமையை, பண்பை, இராவ்சாகிப் அவர்கள் வலியுறுத்தியதுபோலவே அதுவும் வலியுறுத்திற்று. ஆனால் 1951 ல் பெரியார் ஈ. வே. ரா. அவர்களின் முன்னுரையோடு 'சிலப்பதிகாரமும் ஆரியக்கற்பனையும்' என்ற தலைப்புடன் திராவிட இயக்கப்போர்வையில், அவ்வியக்கத்தாரின் அறிவு நூல், கலைநூல் கொத்துக்களிடையே ஒரு அறிவுக்கலை ஆராய்ச்சி நூல்போல மாறுவேடத்துடன் வெளிவந்த நூல் தூற்றல் குழுவின் சார்பாம் இது. பெரியார் ஈ. வே. ரா.வின் முன்னுரை எடுத்துக் காட்டுகிறபடி சிலப்பதிகாரத்தில் இலக்கியப் பண்பு, சரித்திரப் பண்பு, தமிழ்ப்பண்பு ஆகிய நால் வகைப் பண்புகளில் எதுவும் இல்லை என்றே அது வாதாட முயல்கின்றது. இவ்வாதமும், இம்முடிவும் பேராசிரியரே எழுதிய முந்திய நூலின் முடிவுகளிலிருந்து வேறுபட்டவை மட்டுமன்று அவற்கு முற்றிலும் மாறுபட்டவையு மாகும்.

நெளிந்து வளையும் ஆராய்ச்சிப் போக்கு

இராவ்பகதூருக்கு இசைந்தபடி முந்திய நூலிலும், பெரியார் ஈ. வே. ரா.வுக்கு இசைந்தபடி பிந்திய நூலிலும் பேராசிரியர் போதிய அளவு வளைந்து, நெளிந்து கொடுத்திருக்கிறார். ஏனெனில் ஆராய்ச்சித் துறையில் ஊடாடியவர் என்ற முறையில் இரண்டிலும் ஒரு சிலப் பொதுக் கூறுகளை அவர் விட்டு வைத்திருந்தாலும், முடிவுகளும் நோக்கங்களும் பொறுத்த வகையில் இரண்டும் வேறுபட்டவை. தம் ஆராய்ச்சிகளின் போக்கை இரு வேறு இனச்சார்புகளுக்கு இசைய, இரு வேறு இனச்சார்பில் இரு வேறு பண்புகளுடன் உழைத்த இருவேறு பெரியார்களின் ஒப்புதலும் ஆதரவும் பெறுவதற்கேற்ப மாற்றி அமைத்துக்கொள்ளும் வகையில் பேராசிரியர் திறம் பெரிதே ஆகும். இரண்டையும் எழுதியவர் ஒருவரேயானாலும், இரு வேறு சட்டைகள் இரவல் தரப்பட்டு, இருவேறு கட்சியாளர்களின் வழக்கறிஞராக அவர் செயலாற்றியுள்ளார்.

புறக்கணிபபுக் குழுவின் உட்கருத்து

புறக்கணிப்புக்குழுவில் இராவ்பகதூரும் சரி, பேராசிரியரும் சரி சிலப்பதிகாரத்தைப் புறக்கணிக்கவே விரும்பினர்; தூற்ற விரும்பவில்லை. அது வரலாற்று நூலல்ல, கற்பனை நூல் என்று அவர்கள் நிலைநாட்ட விரும்பினர். ஏனெனில் பிற்காலத் தமிழ்க் காப்பியங்களான கம்பராமாயணமும், வில்லிப்புத்தூரார் பாரதமும், அவற்றுக்கு மூலமான சமஸ்கிருத பாரத இராமாயணங்களும் கற்பனை நூல்களே! அவற்றுக்கு இல்லாத சிறப்பு தமிழுக்கும் தனித்தமிழ் நூல்களுக்கும் இருப்பது அவர்களுக்கு அல்லது அவர்கள் சார்பினருக்கு உறுத்தியிருத்தல் வேண்டும். இரண்டாவது, சிலப்பதிகாரம் சங்க காலத்து நூலல்ல, அதாவது தனித் தமிழ்ப்பண்பு உலவிய காலத்து நூலல்ல, என்று அவர்கள் நிலைநாட்ட அரும்பாடுபட்டனர். ஆரியத் தமிழ்க்கலப்பு ஊடாடத் தொடங்கிய தேவாரத்துக்குப் பிற்பட்ட காலநூலே அது என்றும் விளக்க அவாவினர். இதுவும் இயல்பே. ஏனெனில் அவர்களால்கூட அது கம்பராமாயணத்துக்குப் பிற்பட்டது என்று கூறமுடியாமல் போய் விட்டது. ஆங்கில ஆட்சியின் மேலை வரலாற்று முறையும் இல்லாத காலங்களில் நம் வையாபுரி போன்ற அறிஞர்கள் 'வையாபுரி சாஸ்திரி' ஆகி அவ்வாறு கூறியிருக்கக்கூடும். ஆனால் அது கம்பராமாயண காலத்துக்கு முற்பட்டதாயினும் ஒரு சிறிதே முற்பட்ட ஆரிய தமிழ்க்கலப்புக் காலத்துக்கே உரியது என்று கூறுவதன்மூலம் அவர்கள் அதன் அருமை பெருமைகளை ஆரியத்தமிழ்க் கலப்புக்கு, அதாவது ஆரிய நாகரிகத்துக்கு உரியதாக்க விரும்பினர்.

இராவ்சாகிப் ஒதுக்கித்தள்ள விரும்பிய கூறுகள்

ஆர். கே. சண்முகம் பதிப்பின் முன்னுரையில் இராவ்சாகிப் அவர்கள் தமக்கே உரிய கலைப்பாணியில் இக்கருத்தை நயமாகக் குறித்துள்ளார். "இசை பற்றிய கருத்துக்கள், சரித்திரக் கூறுகள், முதலியன எல்லாம் (சிலப்பதிகாரத்தின்) இலக்கிய நயத்தை நாம் அறிவதற்குத் தடையாய் அமைந்துவிடுகின்றன. இவைகளை எல்லாம் புறம்பே ஒதுக்கினாலன்றி, சிலப்பதிகாரத்தின் இலக்கிய நயத்தையும், கலைநயத்தையும், கவித்துவநயத்தையும் நாம் உணர்ந்துகொள்ள முடியாது. இந்நெறியில் இக்காவியத்தைக் கற்றால்தான் 'நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்' என்று சுப்பிரமணிய பாரதியார் கூறியதன் உண்மை விளங்கும்.'

இராவ்சாகிப் அவர்கள் ஒதுக்கித் தள்ள விரும்பிய செய்திகள் இரண்டு. ஒன்று இசைத்துறை, மற்றொன்று சரித்திரக் கூறுகள்–அதாவது சிலப்பதிகார கால ஆராய்ச்சியின் சிலப்பதிகாரத்தின் குறிப்பிடப்படும் வரலாற்றுச் செய்திகளின் ஆராய்ச்சியும், சிலப்பதிகாரம் ஒரு நாடகம் என்பது அவருக்குத் தெரிந்திருந்தால்,

பன்மொழிப் புலவர்
கா. அப்பாதுரை,
எம். ஏ., எல். டி.

அல்லது அவர் காலத்தில் அது அறியப்பட்டிருந்தால் அவர் ஒதுக்க விரும்பிய செய்திகளுள் அதனையும் சேர்த்து அவர் அவற்றை மூன்றாக்கியிருப்பார் என்பதில் ஐயமில்லை. ஏனெனில் இந்த மூன்றுமே சிலப்பதிகாரத்துக்குப் பெருமை தருவதுடன் நிற்காமல் தமிழுக்குப் பெருமை தந்துவிடுகின்றன. தமிழகத்துக்கும், தமிழ்ப் பண்பாட்டிற்கும் பெருமை தந்துவிடுகின்றன. இவை மட்டுமோ? இவையே ஆரியத்துக்கில்லாத பெருமைகளைத் தமிழுக்கு தந்துவிடுகின்றன. இங்ஙனம் தருவதன்மூலம் ஆரியத்துக்குத் தாய்மொழிகளை அடக்கி ஆளும் ஆதிக்க வாய்ப்பை அது கெடுக்கத் தொடங்கிவிடுகிறது.

இராவ்சாகிப் அவர்கள் ஒதுக்கித் தள்ள விரும்பிய கூறுகளில் ஒன்று தமிழிசைச் செய்திகள். அதில், இரு வேறு இனஅறிஞர் தலையிட்டு, தத்தம் ஆராய்ச்சிகளில் அவற்றைக் கலந்துள்ளனர். ஒருவர் ஈழம் தந்த கலைப்பெரும் செல்வர் விபுலானந்த அடிகள். மற்றவர் புதுவைக்கலைஞர் சுத்தானந்த பாரதியார். இருவருமே வடநாட்டவரான இரண்டு உலகப் பெரியார்கள் பெயரால் நடைபெறும் திருமடத்துத் துறவிகள்தான். இருவருமே இராவ்சாகிப் கட்டளையை மீறியவர்கள் தான். ஆயினும் ஒருவரே இராவ்சாகிப்பினால் 'போற்றும் சிலர்' என்று ஒதுக்கியவருள் இடம்பெறத் தக்கவர். ஏனெனில் சுத்தானந்த பாரதியார் சிலப்பதிகார இசையை நுணுகி ஆய்ந்து விளக்க முற்பட்டாலும், அது ஆரிய இசையின் வழிப்பட்டதே என்று ஆறுதலடையத் தவறவில்லை. ஈழத்துச் செல்வர் விபுலானந்த அடிகளோ தனித் தமிழ் இசையின் தனிச்சிறப்புகளையும், தனி முதன்மைகளையும், தொன்மைகளையும் விளக்க முற்பட்டுள்ளார்!

தீச்சுடர் நிதிக்காக
8-4-56 ஞாயிறு காலை 9 மணிக்கு
சென்னை கோகலே மண்டபத்தில்
சிறப்புச் சொற்பொழிவு
திரைப்பட பின்னணி இசைச் செல்வி திருமதி T. V. இரத்தினம் இசைவிருந்தளிப்பார்:
சொற்பொழிவு :
சி. பி. சிற்றரசு
'புத்தர் புன்னகை'
கண்ணதாசன்
'இலக்கியத்தில் காதல்'
டி. கே. சீனிவாசன்
'மாஸ்கோ பாதையில் நாம்'
நன்கொடை 0-8-0.

வேலங்குடித் திருவிழா

கண்ணதாசன்

22

"அத்தான் கடிதம் எழுதி வச்சுட்டுப் பொய்ட்டார்!" என்று பதறினுள், கமலம்.

"என்ன எழுதியிருக்கார்? படி! படி!" என்று துடித்தாள் இந்திரா.

கமலம் நடுங்கும் கரத்தோடு படித்தாள்.

" அன்புள்ள இந்திராவுக்கு,

நான் கண்காணுத இடத்துக்குப் போய்விடப் போகிறேன். என்னைத் தேட வேண்டாம். உயிரோடிருந்தால் மீண்டும் சந்திப்போம்.

அன்புள்ள
பாலன்.

—படித்தாள் கமலம்; துடித்தாள் இந்திரா. கதறி அழுதாள்.

" ஐயோ, இந்த முடிவை உடனே அவருக்குச் சொல்லாமல் போய்விட்டேனே! சொன்னுல் போயிருக்கமாட்டாரே!" என்று சொல்லிச் சொல்லி அழுதாள். அழுகைக் குரல் கேட்டு, கீழே இருந்த எல்லோரும் மாடிக்கு ஓடிவந்தார்கள் அப்பொழுதுதான் கீழே வந்த சுந்தரமும் பதறிப்போய் மாடிக்கு ஓடிவந்தான்.

"என்ன! என்ன! ஏம்மா!" என்று பதறியபடியே தாங்களும் அழ ஆரம்பித்தார்கள், மங்கையர்க்கரசியும் சின்னப்பரும். கண்ணீர்சிந்தி நின்ற கமலம், சுந்தரத்திடம் கடிதத்தை நீட்டினுள். படித்துப் பார்த்த சுந்தரத்திற்கு விஷயம் விளங்கவில்லை." ஏன், பாலன், கண்காணுத இடத்துக்குப் போக வேண்டும்! இந்திராவுக்கும் அவனுக்கும் ஏதாவது தகராறு நேர்ந்திருக்குமோ?"—என்று எண்ணிய சுந்தரம், "ஏம்மா! ஏதாவது சண்டையா?" என்று கேட்டான், இந்திராவைப் பார்த்து.

" இல்லை! எதுவும் இல்லை!" என்று சொன்னபடியே அழுதாள் இந்திரா.

" சரி! இப்ப ஒண்ணும் ரயில் கிடையாது. டவுனுக்குள்ளே தான் திரிவான், போயிக் கூட்டியாந்திடுறேன்!" என்று கூறியவாறு வெளியேறினுன், சுந்தரம்.

ஓய்ந்த இந்திராவும் மங்கையர்க்கரசியும், தங்கள் சங்கடத்தைப் பரிமாறிக் கொண்டார்கள். கமலமும்கூட இருந்தாள். அப்போதும் இந்திரா, தான் செய்து வைத்திருக்கும் முடிவைத் தாயிடம் கூறவில்லை.

பாலனைக் கண்டு பிடிக்கச் சென்ற சுந்தரம், மாலையில் வீடு திரும்பினுன், அவனுடனே வெற்றிய முகத்தோடு பாலனும் வந்தான்! வரும்போது, சுந்தரமும் பாலனும் ஒருவரோடொருவர் பேசவில்லை. வந்த பிறகும் ஊமையாகவே இருந்தார்கள். பேச வேண்டியவற்றை சுந்தரம் ராஜவீதியில் பாலனைக் கண்டு பிடித்த உடனேயே பேசி விட்டான். பாலன், எதையும் தெளிவாகச் சொல்லவில்லை என்றுலும், சுந்தரம், தானே ஒவ்வொரு பிரச்சினையையும் கிளப்பி சமாதானமும் கூறினுன். கமலத்தின் கையைப் பிடித்த பிரச்சினை மட்டும் அங்கே அடிபடவில்லை. காரணம், சுந்தரத்திற்கு அது தெரியாது!

பாலனை அழைத்துக்கொண்டு வந்த சுந்தரம் அமைதியின் ஒரு நுனியைப்பிடித்துவிட்ட பாவனையில் அசந்து உட்கார்ந்தான். எதிரே பாலன் உட்கார்ந்தான். சிபாரிசு செய்து கூட்டி வரப்பட வேண்டிய நிலையில்தான் இருப்பதற்காக அவன் மகிழ்ந்தான். எல்லா மாப்பிள்ளைகளுக்குமே இதில்தான் அலாதி மகிழ்ச்சி.

இந்திரா மெதுவாக, முந்தானைத் தலைப்பைக் கையில் தாங்கியவாறு. பாலனிடம் வந்து, "சாப்பிட வாருங்கள்" என்றுள். மாலை, மணி ஆறு, சாப்பிடாமலா இருந்திருப்பான்? "சாப்பிட்டுவிட்டேன்" என்ருன், பாலன்.

" எங்கே சாப்பிட்டீர்கள்?"- இது இந்திரா.

" ராஜவீதி ஓட்டலில்!" இது பாலன்—இப்போது சின்னப்பரும் அங்கே வந்து, கொஞ்சம் சாப்பிடும்படி சிபாரிசு செய்தார். பாலன், முன்பு கூறிய பதிலையே அவர்க்கும் கூறினுன். சுந்தரம் பாலனையும் இந்திராவையும் தனித்துவிட விரும்பி, வேறு புறம் சென்றுவிட்டான். சின்னப்பரும் குறிப்பறிந்து விலகினர்.

" வாருங்கள், மாடிக்குப் போவோம்!" என்றுள் இந்திரா, பாலன் அசையாமல் உட்கார்ந்திருந்தான்.

" நிறையப் பேச வேண்டும். ஒரு நல்ல முடிவு செய்திருக்கிறேன், வாருங்கள்" என்றுள். அந்த முடிவை உடனேயே சொல்லி, பாலன் சந்தோஷப்படுவதைக் கண்ணுல் காண வேண்டும் போலிருந்தது அவளுக்கு! அப்போதுதான் தனக்கும் அமைதி கிடைக்குமென்று அவள் நம்பினுள்,

பாலன் 'கோபுரத்துப் பொம்மை நிலை'யிலிருந்து விலகி, எழுந்து அவள் பின்னுல் சென்ருன். இருவரும் மாடிக்கு வந்து சேர்ந்தார்கள். இந்திரா, தூசு படிந்திருந்த மெத்தையைத் தட்டிப்போட்டாள். பாலன் உட்கார்ந்தான். எதிரே கொஞ்ச தூரத்தில் நின்றுகொண்டாள் இந்திரா. கொஞ்ச நேரம் மௌனம் நிலவியது. இந்திரா அந்த மௌனத்தைக் கலைத்தாள்.

" நீங்கள் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்பதுதான் என் ஆசை. அதற்காக நீங்கள் எப்படி நடந்துகொண்டாலும் நான் வருத்தப்பட மாட்டேன்"- என்றுள். கமலத்தின் கையைப் பிடித்தது தவறில்லை என்று பாலனுக்குப் படவேண்டும்;

கண்ணதாசன் எழுதும்

புதிய

தொடர் கதை

மனம்போல் வாழ்வு

மே முதல் நாள்

ஆரம்பமாகிறது!

அதுபற்றி அவன் வருந்தக்கூடாது; வெட்கப்படக் கூடாது- இந்த ஆசையில்தான் அவள் பேச்சைத் துவங்கினாள்.

"என்ன இருந்தாலும் 'கொழுந்தியா' தானே? நீங்கள் நடந்துகொண்டது ஒன்றும் தவறில்லே! கமலம் அறியாப் பெண் ...நான்கூட அதைப்பற்றித் தவருக நினைக்கவில்லை. ஏன்... நாளைக்கு...அவளையே நீங்கள் விரும்பினால்கூட மணமுடித்து வைக்கத்தான் நா ' ஆசைப்படுகிறேன்."

பாலன் திடுக்கிட்டான்.

இந்திரா, சலனமின்றித் தொடர்ந்தாள்.

"என் ஆச்சரியப்படுகிறீர்கள்? உண்மையைச் சொல்கிறேன். அக்காளும் தங்கையும் ஒன்ருக வாழ்வதில்லையா? நாங்கள் அன்னியோன்னியமாகவே வாழ்வோம். முடிவு செய்துகொண்டு தான் உங்களிடம் சொல்கிறேன். அத்தான்! நான் இனி வாழ்க்கைக்கு லாயக்கற்றவள். கமலம் உங்கள் மனைவியானால்தான் எனக்கு மகிழ்ச்சி. மரத்துப் போன இந்த உடம்புக்கு இனி சுகம் ஒன்றும் தேவை இல்லை. என்னை மணந்து கொண்டதற்காக உங்கள் இளமையும் அழகும் பாழாகக் கூடாது. கமலம் உங்கள் மனைவியானால்... அதில் அவள் சுகம் பெற்ருல். நான் சுகம் பெறுவது போலத்தா !"

—பாலனுக்கு ஒன்றும் புரியவில்லை. அவன் தலை சுற்றிற்று. வாயடைத்துப் போய் உட்கார்ந்திருந்தான். முகம் மட்டும் தானுக மலர்ந்தது! இந்திரா அதைக் கவனித்தாள்.

"நில்லுங்கள் அவளை வரச் சொல்கிறேன். அவளிடமே கேட்டுவிடுங்கள்..." என்று கூறியபடியே பதிலை எதிர்பார்க்காமல் படபடவெனக் கீழே இறங்கினாள் இந்திரா

இந்திராவின் போக்கினல்—வார்த்தையால், பாலனை வியப்புச் சூழ்ந்தது. இந்திராவின் தியாக உள்ளத்தை நன்ருக அறிந்தவன் தான் பாலன். ஆனாலும் அவ்வப்போது வரும் 'மகத்தான சுயநலம்' அதை மறக்கடித்து விடுவது வழக்கம். இப்போது பாலன் தன்னையே நொந்து கொண்டான். தெரிந்திருந்தும், இந்திராவை நன்ருகப் புரிந்து கொண்டிருந்தும் திடீரென ஏன் இந்தக் காரியம் செய்தோம் என அவன் நினைவு குத்திற்று.

அன்னம் நடப்பதுபோல் அந்தச் சின்னவள் நடந்து மாடிப்படி ஏறுவதை, மயான அமைதியிலிருந்த பாலன் உணர முடிந்தது. ஆம்; கமலம் மெது மெதுவாக, ஏறி, மாடி அறைக் கதவோரம் வந்து நின்ருள். பாலன், தான் முதலில் பேசக் கூடாது என்ற விரதத்தோடு, வேறு புறம் முகத்தைத் திருப்பிக் கொண்டு, அவளைக் கவனிக்காதவன்போல் சாய்ந்து கிடந்தான். கொஞ்ச நேரம் தானும் சிலையாகி நின்ருள் கமலம். அவளுக்குப் பின்னல் வந்த இந்திரா இந்த அமைதியைத் தாள முடியாமல் அவளைப் பிடித்து உள்ளே தள்ளினாள். அந்த வேகத்தில், பாலனின் கட்டில் அருகிலேயே வந்து நின்ருள் கமலம். பாலன் அடங்காத மகிழ்ச்சியோடு அவளைக் கூர்ந்து கவனித்தான்.

கமலம்!—இப்போது அவள் அலங்காரவதியாகவந்திருந்தாள். சாதாரணமான நிலையில் பார்த்தாலே, பாதி உயிர் பறந்து போகும்! அலங்காரமும் சேர்ந்துகொண்டால்...? கமலத்தின் கூந்தல் தாங்கியிருந்த ஒரு கொத்துமல்லிகை தன் கைவரிசையைக் காட்ட ஆரம்பித்தது. மனிதனைக் கெடுப்பதே மலர் வாடைதான்! 'குப்' பென்று அடிக்கும் மலர் வாடையில் மயங்கி விழும் மனிதன், அந்த மலர் குடியிருக்கும் கூந்தலுக்கு உடையவளை அவள் கருப்பாக இருந்தாலும் காமக்கண் கொண்டுதான் நோக்குவது வழக்கம்! பாலனுக்கு முன்னல் நின்றதோ ஈடுகாட்ட முடியாத பேரழகு - தனிமை! - மனைவியே சம்மதித்து அனுப்பியுள்ளாள்! - போதாதா? பாலன் காதல் சுரத்தோடு "கமலம்!" என்ருன். கமலம் தலைகுனிந்து நின்ருள். பாலன் எட்டி அவள் கையைப் பிடித்தான். அவள்மேனி சிலிர்த்தது. அந்தக் கையிலிருந்த வளையலை, மேல்புறமாகத்தள்ளி விட்டான். இப்போது அவனுக்குத் தைரியம் வந்துவிட்டது. கையைப் பிடித்து இழுத்துத் தன் அருகில்உட்கார வைத்துகொண்டான். அவன் புதிய உலகத்துக்குப் பறப்பவனுகக் காணப்பட்டான்.

"கமலம்! நீ என்னை விரும்புகிருயா?"

—இல்லை! நிச்சயமாக அவள் அவனைக் காதலிக்கவில்லை. அக்காள், காதலிக்கச் சொல்லி ஆணையிட்டாள். அக்காளுக்காகவே அங்கு வந்துள்ளாள். ஆனல், கமலம் அதைச் சொல்லவில்லை.

"உம்..."என்று தலையசைத்து ஆமோதித்தாள். பாலன் அவள் முகத்தை நிமிர்த்தினன்.. முழுமதியின் பாலொளியை அந்த முகத்திலே கண்டான். எந்த உருவமும் நிழலாடாத இரு கருவிழிகளுக்குள்ளும் தன் உருவம் பிரதிபலிப்பதைக் கண்டான். செய்து வைத்தது போன்ற இமையும், அதிலே அலங்கரிக்கப்பட்டிருந்த மைச் சிதறலும், பளிச்சென்று ஒளி வீசும் கண்களும் - சிற்பியின் கற்பனைக்கு அப்பாற்பட்ட அந்தச் சிலை வடிவின் ஒரு பாகமாகத் தன் கைகளுக்குள் அகப்பட்டிருப்பதை நினைத்ததும் அவன் மேனி பூரித்தது. உதடுகளைக் கவனித்தான்! அவன் உயிரே நின்றுவிடும்போலிருந்தது. 'லிப்ஸ்டிக்' பூசாமலே இவ்வளவு சிவப்பு எப்படி வந்தது என்று அதிசயித்தான், சிறு பிளவுகள் காணப்படாத அந்தச் சித்திர உதடுகளில், பாலன்... தன்னை மறந்து ஒரு முத்தம் பதித்தான்! கமலத்தின் மேனி ஆடி அடங்கிற்று. பாலன் உலகை மறந்தான், 'கமலம்!" என்று தாளமாட்டாமல் கூறி, தன் கைகளுக்குள் முழுக்க அரவணைத்துக் கொண்டான். கமலம், தன்னை மறந்து அவன் மார்பில் சாய்ந்திருந்தாள்.

"நீ என்னை மணந்துகொள்ளப் போவதாக இந்திரா சொன்ஞள்..." - என்று இழுத்தான்.

கமலம் பேசாமலிருந்தாள்.

"உனக்குச் சம்மதந்தானே?"

கமலம் கண்களை மூடிக் கொண்டாள்.

"சொல் கமலம்!"

கமலத்தின் முகம் சிவந்தது!

எழுத்தாளனுக்கு அதற்கு மேல் சொல்லவா வேண்டும்! கண்டவுடனே கையைப் பிடிக்கிற வல்லமையும், பார்வையிலேயே பாடம் படிக்கிற புத்திக் கூர்மையும் எழுத்தாளன் ஒருவனுக்குத் தானே வரும்!-பாலன் புரிந்து கொண்டான். முத்தங்களைத் தடையின்றி வழங்க ஆரம்பித்தான்.

இந்திரா!-அவள் இந்த நாடகத்தைக் கவனித்துக் கொண்டு தானிருந்தாள்! கண்ணீரோடு - ஆனந்தத்தோடு! பாலன் அதற்கு மேலும் கமலத்தோடு விளையாட விரும்புபவன்போலக் காணப்பட்டான். இந்திரா அதை விரும்பவில்லை. திருமணத்திற்கு முன்னல் கணவனுக வரப் போகிறவனேடுகூட - விளையாட மாட்டார்கள் உயர் குடும்பப் பெண்கள்.

பாலனின் கரங்கள் நிலை மறக்கத் துவங்கின. கமலம் கூனிக் குறுகி அவன் மடியில் சாய்ந்து கிடந்தாள். "யாரும் பார்ப்பார்களோ!" என்ற பயம் வேறு அவள் நெஞ்சைக் கவ்வியது. இந்திரா மாடிப் படியில் நாலுபடி இறங்கி நின்றுகொண்டு, "கமலம்!" என்று குரல் கொடுத்தாள். கமலம் பசுக்குரல் கேட்ட கன்றுபோல் அவன் கைகளிலிருந்து விடுபட்டு, படபடவென இறங்கிஞள். பாலன் வருந்தவில்லை!-"இனி கமலம் நமக்குத்தான்!" என்ற நம்பிக்கைதான் அவனுக்கு வந்துவிட்டதே! உற்சாகமாக மெல்லிய குரலில் பாட ஆரம்பித்தான். இப்போது அவனை உதைத்தாலும் அந்த வீட்டை விட்டுப் போகமாட்டான்! இந்திரா அதில் வெற்றி பெற்றுவிட்டாள்.

இன்று திருமணம்! சுந்தரத்திற்கும் சாரதைக்கும்! வீடு மேளச் சத்தத்தில் மிதந்தது. எல்லோரும் திருமண வேலையில் மூழ்கிக் கிடந்தார்கள். பாலன் மட்டும் கமலத்தைப் பார்ப்பதற்கு அலைந்து கொண்டிருந்தான். இதை அறிந்துகொண்ட இந்திரா, மெதுவாக பாலனிடம் வந்து, "தப்புத் தவரு ஒண்ணும் செஞ்சு வச்சுருதிங்க! , சும்மா இருங்க! ஒரு பத்து நாள் பொறுத்துக்கங்க!" என்று சொல்லிவிட்டு, பதில் பெருமலே பறந்தாள்.

சாரதையும் சுந்தரமும் அருகருகே நின்ற காட்சியைக்கண்டு இந்திரா பூரித்தாள். சாரதை, சுந்தரத்தைப் பார்க்கவில்லை. இந்திராவையே கவனித்தாள்! தன் நாத்தனரின் நல்ல குணம் தான் அவளுக்கு விருந்தாய் அமைந்தது. திருமணம் முடிந்தது. அன்று இரவே சாந்தி முகூர்த்தம் வைத்துவிடுவதென்று முடிவாயிற்று. இந்திராவின் தாய் மங்கையர்க்கரசி ஒரு கிழவியை அழைத்து வந்து, படுக்கையைத் தட்டிப்போட்டு, சாரதையின்கழுத்தில் "பிள்ளைக் கயிறு" கட்டிவிடச் சொன்னாள். அந்தக் கிழவி பதினெரு பிள்ளைகள் பெற்றவளாம். அவள் படுக்கைபோட்டால் நிறையக் குழந்தைகள் பிறக்குமாம்! இந்திரா அந்தக் காட்சியை ரசித்தாள். தன்னைத் தவிர மற்ற எல்லோரும் நன்ருக இருக்கிருர்கள் என்று தெரிந்தும், அந்தப் பிஞ்சு மனத்தில் பொருமை துளிக்கூடத் தலைகாட்டவில்லை.

இரவு வந்தது...மண வீட்டிலிருந்து; மாப்பிள்ளையும் பெண்ணும் பிரிக்கப்பட்டார்கள். தனி அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். இந்திரா அண்ணனையும் அண்ணியையும் அனுப்புகின்ற பணியைக் கவனித்தாள். அண்ணியின் கன்னத்தில் சாந்துப்பொட்டு வைத்தாள். களங்கமில்லாத அந்தக் கண்ணுடி அழகைப் பார்த்து யாரும் திருஷ்டி வைத்துவிடுவார்களாம். அதனால்தான் சாந்துப் பொட்டினல் ஒரு செயற்கைக் களங்கம் உண்டாக்கினாளாம்.

மணி பதினென்று அடித்தது. அதுவரை கமலத்தை மறந்துவிட்ட இந்திரா, "கமலம் கமலம்!" என்று அழைத்தபடி தேட ஆரம்பித்தாள். கீழே எங்கும் காணவில்லை. அவள் நெஞ்சம் துணுக்குற்றது. மாடிக்குச் சென்ருள். கதவு தாளிடப்பட்டிருந்தது. "கமலம்! கமலம்!" என்று கதவைத் தட்டினாள். அவளை, பயம் சூழ்ந்தது. கல்யாண வீட்டில் ரசாபாசம் நிகழ்ந்துவிடக்கூடாதே என்று அவள் அஞ்சினாள்.

தொடரும்

தென்பாண்டி வீரன்

ஏப்ரல் 17ம் தேதி தொடர்வதாக இருந்த **'தென்பாண்டி வீரன்'**—பெருங்கதை தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது. ஆசிரியர் கண்ணதாசன் எழுதும் புதிய தொடர்கதை மே மாதம் முதல் நாள் இதழில் ஆரம்பமாகிறது.

கிளி பறந்தது

ஆசிரியர் : நாகமுத்தையா

'நல்ல தமிழ் நாவல்' என்று எல்லோரும் புகழ்கின்ற உயர்ந்த காதல் கதை.

விலை ரூபாய் ஒன்று.

எல்லாப் புத்தக வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

பன்மொழிப் புலவர், கா. அப்பாதுரை, எம். ஏ. எல். டி.

பதில் தருகிருர்

இராசு, கே. புரம்.

''மன்னர் விழித்தாமரை
பூத்த மண்டபத்தே
பொன்னின் மடப்பாவை
போய்ப்புக்காள்."

இந்தச் செய்யுளின் விடப்பட்ட அடிகளை எழுதி இதற்கு விளக்கமாக உரை தருக?

இது "நளவெண்பா" சுயம்வர காண்டத்திலுள்ளது. விடப்பட்ட அடிகள்.

''மின்நிறத்துச்
செய்யதாள் வெள்ளைச் சிறை
அன்னம் செங்கமலப்
பொய்கை வாய்ப்
போவதே போன்று.''

இதன் பொருள் வருமாறு:-

மின்னல் போன்ற நிறத்தையும் சிவந்த கால்களையும் வெள்ளைச் சிறகுகளையும் உடைய ஒரு அன்னப் பறவை சிவந்த தாமரைப்பூக்கள் நிறைந்த குளத்தில் புகுவதைப் போல;இளமையும் அழகும்பொருந்திய பொன்னால் செய்த பதுமை போன்ற தமயந்தி அரசருடைய கண்களாகிய தாமரை மலர்கள் விளங்குகின்ற சுயம்வர மண்டபத்திலே புகுந்தாள்.

இங்கே, மண்டபம் பொய்கைக்கும், மன்னருடைய கண்கள் தாமரை மலருக்கும் தமயந்தி அன்னத்துக்கும் ஒப்புமையாக்கப் பட்டுள்ளது.

◉

எஸ். செல்வம், சோழவந்தான்.

1. நாவலர் பண்டித ந. மு. வேங்கிடசாமி நாட்டவர்கள்.

''மங்கை மாதவி வழி முதல் தோன்றிய அங்கரவு அல்குல் ஆடலும் காண்குவம்'' (சிலப்பதிகாரம் கடலாடு காதை-வரி24-25)உரையில் மாதவியின் அல்குல் அரவுபோல் இருந்ததாகக் கூறப்படுகிறது, இந்த இடத்தில் இவ்வுரை சரியா? இல்லையேல் முழுப்பொருள் தேவை?

2. "அங்கரவு அல்குல்" - இத் தகையோருக்கே உரியது என்று இளங்கோவடிகள் உபயோகித்தது ஏன்?

1. "அல்குல்" என்பது மறைவிடத்திற்கு இடக்கரடக்கலாகவே பிற்காலக் கவிதையில் வழங்கிற்று. அதன் பழம்பொருள் அரைவட்டமும் துடையும் கூடிய அழகிய இடுப்பு வளைவு என்பதே. பாம்பின் படம் இதேபோல அழகாக வளைந்திருக்கிறது. உவமையின் பொருத்தம் இதுவே. வேறு எது எதுவோ நினைத்துக்கொண்டு,இதில் கேள்வியும் புதிரும் காண்கின்றனர் சிலர் மூலப்பொருள் தெளிவானது எளிமையானது.

2. பாம்பின் படத்தின் வளைவு எல்லா மக்கள் இடுப்பழகுக்கும் - ஆடவர் - பெண்டிர் இருபாலார் அமைப்பிற்கும் பொருத்தமான பொதுஉவமையே ஆகும்.சிற்றன்ன வாசல் போன்ற பழைய கலை வடிவங்களில் பெண்டிர் உடல் வடிவங்களில் மட்டுமின்றி, ஆடவர் வடிவங்களிலும் இதே அழகைக் காணலாம். ஆயினும் இந்த அழகு ஆடவர்க்குப் பொது. பெண்டிர்க்குச் சிறப்பு அதுபோலவே பெண்டிர்க்குப் பொதுவான இந்தச் சிறப்பு ஆடல்பாடல் பயிற்சிகளுக்கே வாழ்வில். முதலிடம் தந்த கலை நங்கையருக்கு தனிச் சிறப்பாகும். இதில் வியப்புக்கோ,'ஐயுறவுக்கோ' இடமில்லை. ஆனால் பழங்காலத்து கலை நங்கையர்-பாணரின் பெண்களாகவும் விறலியர்களாகவும் பெருமையுடன் வாழ்ந்தவர்கள் - இடைக்காலத்திலும், இக்காலத்லும் ஒழுக்கம்கெட்ட இழிமகளிராகக் கருதப்பட்டுவிட்டனர் புதிய நாடகம், படக்காட்சிகளில்கூட இதனால் நல்ல குடிப்பெண்கள் நுழைய இன்னும் இடம் ஏற்படாத நிலை இருந்து வருகிறது.கலையையும் காதலையும் நாம் சிறப்பாக இளைஞர் நங்கையர் இங்ஙனம் ஒழுக்கக் கேட்டுடன் சேர்த்து முடிபோட்டு எண்ணுகிற, நடத்துகிற மனப் பான்மை ஒழியவேண்டும். இது வருங்கால உலகமும்; வருங்கால இளைஞரும் காணவேண்டிய செய்தியாகும்.

◉

அண்ணு முராசோலி, உதகை.

தமிழ்நாட்டில் முதன் முதலில் கோயில் கட்டிய மன்னன் யார்? எந்த ஆண்டு? விளக்கம் கூறுக!

இதுபற்றிய விரிவான விளக்கம் தென்றல் முன் ஓர் இதழில் தரப் பட்டுள்ளது. சுருக்கம் மட்டுமே இங்கே கொடுக்கிறோம்;-

சங்க காலத்திலேயே தமிகழத்தில் கோயில்கள் இருந்தன.ஆனால் அவை சிறிய கோயில்கள். மரக் கோயில்கள். கற்கோயில்களும், பெரிய கோயில்களும் பல்லவர்களாலும், பிற்கால சோழர்களாலும், பாண்டியர்களாலும் கட்டப் பட்டன. முதன் முதல் பெயரளவான கோயில் கட்டிய தமிழரசன் முற்கால சோழருள் ஒருவனான செங்கணன். இவன் எழுபது சிவன் கோயில்கள் கட்டியதாக ஆழ்வார்களால் குறிக்கப்படுகிறன். இவன் சைவ நாயன்மார்களில் ஒருவன். ஐந்தாம் நூற்றண்டில் வாழ்ந்திருக்கலாம் என்று தோன்றுகின்றது.

இவை தவிர, முதல் கோயில் கட்டியவன் யாரென்று கூறமுடியாது. உண்மையில் முதல் கோயில்கள் கோயில்களேயல்ல. அம்பலங்கள். அதாவது வீரக்கல் நாட்டிய திறந்த வெளிகள். "அம்பலம் என்ற தமிழ்சொல் கோயில்களின் வரலாற்றைக் குறித்துக் காட்டுகிறது. அதுவே, குடியாட்சியின் வரலாற்றையும் காட்டுகிறது. ஏனென்றால் அம்பலம் என்பது ஊர்ப்பொது வெளியில் கூடும் ஊர்க் கூட்டத்திற்கும் பெயர்.

◉

ஆர். எஸ். பிரகாசம், பாமக்குடி.

சிலப்பதிகாரம் காதை 14, வரி 65 ல் கரந்து படை என்று காணப் படுகிறதே. கரந்து படை என்றால் என்ன?

வரி பிசகாயிருக்கிறது அன்பரே! சரியான குறிப்புத் தருக?

எரி இரண்டும் சிறகா,
எயில்வயிறாக......
காருடைய பீலிகடி
காவா-நீர்வண்ணன்
அத்தியூர் வாயா
அணிமயிலே போன்றதே
பொற் றேரான்
கச்சிப் பொலிவு,

இப்பாட்டு தண்டியலங்கார மேற் கோள் பாடலில் வருகிறது. இது ஒரு ஊரை குறிப்பது போலுள்ளது. இது எவ்வூர்? இப்பாட்டின் பொருள் என்ன? விவரமாக எழுதுங்கள்!

இது தனிப் பாடல்களில் கண்ட ஒரு பழைய வெண்பா. தமிழகத்தின் பண்டை வரலாறு காண முற்படுவோர்களுக்கு இதுபோன்ற பல தனிப் பாடல்கள் மறைந்துவிட்ட பழைய மரபுகளைச் சுட்டிக் காட்டும் பழமைப் பல கணகளாய் உதவுகின்றன.

காஞ்சியைச் சுற்றியிருந்த பகுதி அக்காலத்தில் தொண்டை நாட்டின் இருபத்துநாலு கோட்டங்களில் ஒன்றுன. எயிற்கோட்டமாகும். அதன் தலைநகரம் எயிற்பகுதி என்ற பழம் பெயருடைய காஞ்சிபுரமாகும். ஆரியர் வருவதற்குமுன் திராவிடர்கள் கோட்டை கட்டிய நகரங்களிலே தான் வாழ்ந்தனர். அத்தகைய நகரங்கள் பல இருக்கு வேதகாலம் வரை வடமேற்கு இந்தியாவிலும், குப்தர் காலம் வரை வடஇந்தியாவில் கங்கையாற்றுத் நீரத்திலும், விந்தியமலைக்குப் பக்கத்திலும், தமிழகத்தில் சங்க காலம் வரையும் இருந்தன. அத்தகைய கோட்டை நகரங்களில் தலைசிறந்த ஒரு கோட்டை நகரமாக காஞ்சிபுரம் விளங்கிற்று. இங்கே ஆண்ட சோழர்களை சோழநாகர் அல்லது சோரநாகர் என்றுபண்டைக்கிரேக்க வரலாற்று ஆசிரியர் குறிக்கின்றனர்.சங்க காலத்தில் இங்கே ஆண்ட மன்னன் இளந்திரையன் என்ற வல்லமை வாய்ந்த அரசன். அவனைக் கடியலூர் உருத்திரங் கண்ணனூர் பாடிய பாட்டே பத்துப்பாட்டில் ஒன்றுகிய "பட்டினப்பாலை."

மேற்கூறிய பாட்டு அக்காலக் காஞ்சிபுரத்தின் அமைப்பை அழகிய வர்ணனையுடன் நமக்கு எடுத்துக் காட்டுகிறது.

பாட்டின் பொருள் வருமாறு :—

அழகிய தேரையுடைய திரையன் ஆளுகின்ற காஞ்சிபுரம் அழகிய மயிலின் தோற்றத்தைப் போன்றது.

இரண்டு பக்கமும் இரண்டு ஏரிகள். அவை இரண்டு சிறகுகள் போன்றவை. இரண்டின் நடுவே கோட்டை. அது மயிலின் வயிறு போன்றது. இவற்றின் பின்னே காவலையுடைய பெரிய பூங்கா உள்ளது. அது மயிலின் தோகை போன்றது.மேகங்களை அளாவுவது. செல்வம்மிக்க அத்தியூர் கோட்டை வாயிலின் முன்னே இருக்கிறது.

இங்கே அத்தியூர் எனப்படுவது வரதராசப்பெருமான் கோயில் அமைந்த பகுதி. இதை இன்று சின்னக் காஞ்சிபுரம் என்று சொல்லுகிறோம்.யானை வடிவமான சிறுமலை அடுத்துள்ளதனால் அது இப்பேர் பெற்றது.

அழகப்பா வைத்தியசாலையின்

டானிக் சாந்தினி

பெண்களுக்கு ஏற்படும் சூதக வாய்வு, சூதக வயிற்றுவலி, அகால மாதவிடாய் மற்றும் சூதக சம்பந்தமான எல்லா வியாதிகளையும் குணமாக்கும் சிறந்த சூதக நிவாரணி.

தமிழ்நாடெங்கும் ஏஜண்டுகள் தேவை.

டி. என். சொக்கலிங்கம் பிள்ளை சன்ஸ்,

மருந்துக்கடை : : மதுரை.

அழகுதரும் கூந்தல் வளர்ச்சிக்குச் சிறந்தது

வைடா சுகந்த வர்த்தினி

கூந்தல் உதிர்தல், பூச்சிவெட்டு, வழுக்கை முதலியவைகளைத் தடுத்து கூந்தலை அடர்த்தியாகவும், கருமையாகவும் நீண்டு வளரச் செய்யும், நறுமணமிக்கது வைடா சுகந்த வர்த்தினி.

தென்னுடெங்குமுள்ள எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பு:

என்சியெம் இண்டஸ்ட்ரீஸ்,

40, வடக்குச்சித்திரை வீதி, : : மதுரை.

தோற்றுன் துறவி...

— 1-ம் பக்கத் தொடர்ச்சி —

சேவடி என்று புலம்பிக்கொண்டிருந்ததால் அவளுடைய பூவடிகள் நோவதே அவளுக்குத் தெரியவில்லே. பாவம்! புலித்தோல்மீது ஜகநாதர் தியானத்திலிருந்தார். சர்க்கஸ்காரனைப்போல் கால்களைப் பின்னிக்கொண்டு உட்கார்ந்திருந்தார். கோபி உள்ளே நுழைந்தாள். சாமியாருக்கு எதிரே கூண்டுக்குள் அடைபட்டுக்கிடந்த பஞ்சவர்ணக்கிளி கத்தி,சிறகடித்தது. "யாரது"–கண்களை மூடியபடியே கேட்டார் ஜகநாதர். "அடியேன் கோபி வந்திருக்கிறேன் குருநாதா?" "கோபி! ஏன் வந்தாய்! தியானத்திலிருக்கிறேன் என்பது உனக்குத் தெரியாதா? போ! எதாயிருந்தாலும் குருபூஜை கழித்துச் சொல்! போய்விடு!" என்று கண்களைத் திறக்காமலே சொன்னுர் அவர்.

"கோபிக்கு தூக்கி வாரிப்போட்டது. அவரது பதில்கேட்டு அல்ல, துறவியின் பளபளப்பான சரீரம் துரும்பாகிவிட்டிருந்ததைக் கண்டு அவள் திடுக்கிட்டாள், கண் கலங்கினுள். வீரியமூட்டும் உணவருந்தி,விருப்பத்திற்கேற்ற வாழ்வு நடத்தும் சுகவாசியின் உடம்பு ஏன் வற்றிப்போய் விட்டது? கோபி கவலேப்பட்டாளேயன்றி அவளுக்குக்காரணம் புரியவில்லே. இரண்டு மாதங்களுக்குப் பிறகு அவ்வா குருவைப் பார்க்கிருள்?

மறுவாரம் குருபூஜை வந்தது. எதற்காக இந்தக் குருபூஜை என்று சீடர்களுக்குக்கூடத் தெரியவில்லே. "சிடர்கள் என்னைக் குளிப்பாட்டி பாலாபிஷேகம் செய்ய வேண்டும்" என்ருர் சாமியார் ஜகநாதர்.

"அந்தத் திருப்பணியை நான் செய்கிறேன்" என்று முன்வந்தாள் கோபி. ஜகநாதர் அப்போதும் கண் திறக்கவில்லே. ஒப்புவதற்கு அறிகுறியாகத் தலேயசைத்தார்.

எழில், பாவத்தை இழுக்கும் தூண்டில் முள் என்று உபதேசித்த அதே உருவத்திற்கு அந்த எழிலரசி எண்ணே தேய்த்துவிட்டாள். அவன் எலுமிச்சம் பழம்போல இருந்தபோதுகூட அல்ல; இளேத்து எலும்புக்கூடான பிறகு! கொடுமை! கொடுமை!! அழகுக் கலேயைப் பழித்த ஒருவன், தான் வடித்த சிலேயைத் தொட்டு விட்டால்கூட சிற்பி சகிக்கமாட்டான்; ஒரு அவலட்சணம் என் சிலேயைத் தொட்டுவிட்டதே என்று தன் கரங்களேயே வெட்டிக்கொண்டு விடுவான். ஆனுல் கோபி-கோலேந்திவீற்றிருக்கும் பட்டத்து ராணியின் எடுப்புப் வனப்பும் பெற்ற பெண் ணேவியம்! இருட்டறைக்குள் அடைந்துகிடந்த அந்தத் துறவிக்கு இதயம்விட்டுப் பணிவிடை செய்தாள்! எல்லாம் திருவடி மோகம்! மோட்சலோகப் பித்து! ஆனுல் சூழ்ந்திருந்த பிறசீடர்களின்ரகசியப் பேச்சு "குருநாதர் குடுத்துவச்சவருதான்" என்று பேசிக்கொள்வது போலிருந்தது. குருபூஜை முடிந்தது. சன்னதியின் சார்பில் ஆயிரம் ஏழைகளுக்கு அன்னமளித்து ஆடை வழங்கப்பட்டது. பசிபோக்கிக் கொண்டவர்கள் மடத்தை வாழ்த்தி, முன்னின்றும் பணியாற்றிய கோபியை "மகராசி என்னைக்கும் சிரஞ்சீவியா இருக்கணும்" என்று வாய்விட்டுக் கூறினுர்கள். ஆனுல் மறுநாள்?

இரவு தூங்கப்போன துறவி ஏன் தூக்கில் தொங்கினுர்?–யாருக்கும் தெரியவில்லே.

பிணமாகத் தொங்கும் ஜகநாதரின் மூக்கில் ரத்தம் கொட்டி உறைந்திருப்பது ஏன்? – எவருக்கும் புலப்படவில்லே.

இதோ கோபி சொல்கிருள்:

நான்தான் கோபி. முன்பு தாசி–இப்போது கன்னிமாடத்தலேவி. என்னை துறவி ஜகநாதர் துறவு கொள்ளச் சொன்னுர். ஒப்புக்கொண்டு எனது ஆடம்பர வாழ்வுக்கு முழுக்குப் போட்டுவிட்டு எளியவாழ்வை மேற்கொண்டேன்; கன்னிமாடத் தலேவியானேன். குருநாதர் ஜகநாதரிடம் எனக்கு அதிக பய பக்தி உண்டு. நான் கன்னிமாடத்தில் சேர்ந்த பின்பு குருநாதர் மெலிந்துகொண்டேபோனுர். எனக்கு மிகவும் கவலேயாக இருந்தது. காரணம் புரியவில்லே. திடீரென்று எங்கள் மடத்தில் குருபூஜை யொன்று வந்தது. எனது விருப்பத்திற்கு இணங்க, ஜகநாதரை நான் என் கைகளாலேயே குளிப்பாட்டி பாலாபிஷேகம் செய்தேன். அன்றிரவு...!

நான் தனியறையில் படுத்திருந்தேன். ஜகநாதர் கதவைத் தட்டினுர். தூக்க வெறியிலும் எங்கிருந்தோ மரியாதையை வரவழைத்தபடி நெகிழ்ந்து கிடந்த எனது மேலாடையை சரி செய்துகொண்டு கதவைத் திறந்தேன். என் சுவாமிக்கு ஏதோ போதை! ...ஆம் போதைதான்! என் கைகளைப் பிடித்தார். ஏதோ புது உபதேசம் என்று எண்ணினேன். என் கைகளை அவர் கண்களில் ஒத்திக்கொண்டார். நான் துவேஷம் கொள்ளவில்லே. குழந்தையின் பிஞ்சுக் கைகளை தாய் தந்தையர் கண்களில் ஒத்திக்கொள்வதில்லேயா?...அவர் செயல் மீறியது. "கோபி, என் மெலிவுக்குக் காரணம் நீதான். நான் ஏன் கொஞ்சநாட்களாக கன்னிமாடத்திற்கு வருவதில்லே தெரியுமா? உன்னைப் பார்த்துவிட்டால் என் மனம் கெட்டுவிடுகிறது. பழகப் பழகத்தான், அடிக்கடி பார்க்கப் பார்க்கத்தான் அழகுக்கு எவ்வளவு சக்தி உண்டு என்று தெரிந்துகொண்டேன்.இனி என்னுல்தாங்க முடியாது கண்ணே! துறவிகள் ஏன் காட்டுக்குப் போனுர்கள் என்று அறிந்துகொண்டேன். வா, மூன்ருவது மாடிக்குப் போய்விடுவோம். அங்கே கூண்டுக்கிளி தவிர வேறு யாருமில்லே. வா போய்விடுவோம்! யாரும் பார்த்துவிடப் போகிருர்கள்" என்று அடுக்கிக் கொண்டே போனுர். அவ்வளவு நேரமாக நான் காதுகொடுத்து மட்டும் கேட்டுக்கொண்டிருக்கவில்லே. அவரை ஒரே அறையில் சாய்ப்பதற்கு வசம் தேடிக்கொண்டிருந்தேன். எதிர்பார்த்த 'போஸ்' கிடைத்தது.வலக்கரத்தால்இழுத்து ஒரு அறை கொடுத்தேன். ஜகநாதர் சுவர்மீது மோதுண்டார். அந்த இடத்திலேயே மூக்கிலிருந்து அவருக்கு ரத்தம் கொட்டியது. "தோற்றேன் கோபி, தோற்றேன் கோபி" என்று கூவினுர். சத்தம் கேட்டு, யாரோ எழுந்துவரும் காலடி ஓசை கேட்டது. துறவி அடுத்த கணம் எழுந்து ஓடிவிட்டார். நான் முகத்தை மூடிக்கொண்டு குறட்டைவிட்டுத் தூங்குவதுபோல நடித்தேன். மறுநாட்காலே அவர் பிணமாகத் தொங்கினுர். இந்த ரகசியம் யாருக்கும் தெரியாது.இதுவரை நான் யாரிடமும் சொல்லவில்லே. இன்னும் நான் துறவிப் பெண்தான். இனி என்றும் நான் துறவிப்பெண்தான். என் குருநாதர் தவறிவிட்டார்! உண்மைதான்! ஆனுல் எனக்கு அவர் காட்டிய பாதை கோணலானது அல்ல என்பது என் எண்ணம்! இதோ அவருடைய கல்லறைக்குத்தான் போகிறேன். போன வெள்ளிக்கிழமை இதே நேரத்தில்தான் நான் அவரைக் குளிப்பாட்டினேன். இன்று அவர் சமாதியை வலம் வரப்போகிறேன். யாருடைய சமாதியை? விரகதாபம் கொண்ட ஜகநாதரின் சமாதியை அல்ல! என் வாழ்வின் இறுதி அத்தியாயத்தை மாற்றி எழுதிய ஆரம்பகால ஜகநாதரை! புரட்சிச் சாமியாரை! ★

நன்றி

12-3-56 ல் திருப்பரங்குன்றத்தில், அறிஞர் அண்ணு அவர்கள் தலேமையில் நடைபெற்ற எனது திருமணவிழாவிற்கு வருகைதந்து சிறப்பித்த நண்பர்கட்கும், வாழ்த்துக் கடிதங்களும் தந்திகளும் அனுப்பிய நண்பர்கட்கும், எனது மனமுவந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பன்,
R. M. வீரப்பன்
(M. G. R. நாடகமன்றம்)

சோனுல்

முகப்பரு, வேனல்கட்டி, சேத்துப்புண், பித்த வெடிப்பு, தீப்பட்டபுண், சொரி சிறங்கு, கக்கூஸ் பத்து, வெட்டுக்காயம் முதலிய சரும வியாதிகளை குணப்படுத்துவதில் நிகரற்றது

எங்கும் கிடைக்கும்.

ஆரன்ஸ் கிரைப் டில் வாட்டர்

குழந்தைகளுக்கு உண்டாகும் வயிற்றுவலி, வயிற்றேட்டம், மாந்தம் முதலிய அஜீரணக் கோளாறுகளைப் போக்கி ஆரோக்கியத்தை உண்டாக்கும். எங்கும் கிடைக்கும்.

தயாரிப்பவர்கள் :

தி பாரத் டிரக் ஹவுஸ்,
மதுரை.

மணமகள் தேவை

செங்குந்த முதலியார் வகுப்பைச் சார்ந்த இருபத்தொன்பது வயதுள்ள இளைஞர் ஒருவருக்கு சீர்திருத்த முறைப்படி திருமணம் செய்துகொண்டு வாழ ஒரு மணமகள் தேவை. மணமகள் இருபது வயதிற்கு மேற்படாமலும், எட்டாவது வகுப்போ அல்லது அதற்கு மேற்பட்ட வகுப்போ படித்து முடித்ததாக இருக்கவேண்டும். ஆசிரியை பயிற்சிப்பள்ளியில் படித்து முடித்திருந்தால் நலம். சாதி, மத, இன வேறுபாடுகள் குறித்து எந்தவிதமான நிபந்தனைகளும் இல்லே. இளம் விதவையாயினும் ஏற்றுக்கொள்ளப்படும். மணமகன் கோயம்புத்தூரிலுள்ள பித்தான் தொழிலகம் ஒன்றில் வேலே செய்து மாதம் ஒன்றுக்கு நூறு ரூபாய் சம்பளம் பெற்று வருகிருர். மேற்கொண்டு விளக்கங்கோர விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதவும்.

தமிழ்க்காவலன்,
6-20, வீதி எண் 9,
காந்திபுரம் (P.O.), கோயம்புத்தூர்.

மனைவிக்கு... கணவர்க்கு...

— நாகமுத்தையா —

1□

அன்புக் கமலாவுக்கு,

'வந்துசேர்-உன் வார்த்தை தேவை இல்லை,' என்று நீ எழுதிய கடிதம் வந்தது. அதைப் படிக்கும்போது திருக்குறள் பாட்டு ஒன்று என் நினைவிற்கு வருகிறது.

'சென்று பொருள் சேர்த்து நன்று வந்து சேர்கிறேன் விரைந்து,' எனச் சொல்லி தலைமகன் தலைவியிடம் விடை கேட்கிறான். தலைவிக்குத் தலைமகனைப் பிரிந்து தனித்து வாழ்வதில் சிறிதும் விருப்பமே இல்லை. 'பிரிந்துபோக வேண்டாம், பிரிவைத் தாளாது என் நெஞ்சம்,' என்று அழமாட்டாத குறையாகத் தன் அகந்திறந்து சொன்னாள் தலைவி. தலைமகன் பலப்பலக் காரணங்களைச் சொல்லி 'போகிறேன், போனதும் பொன்னோடும் பொருளோடும் திரும்புகிறேன்,' என்று ஆசைவார்த்தை பேசுகிறான் தலைவியிடம் எதுவுமே பலிக்கவில்லை. தலைமகனோ போகாதிருக்க விரும்பவில்லை. இதை நன்கு உணர்ந்துகொண்ட தலைவி வேட்டு வைத்தாற்போல ஒரு வார்த்தைக் குண்டைப் போடுகிறாள். "அன்ப, நான் போகவில்லை,' என்ற வார்த்தைகளை வேண்டுமாயின் என்னிடம் சொல்லு, கேட்டுக்கொள்ளுகிறேன். அதை விட்டு விட்டு ஆகாத சால்சாப்புகள் எதுவும் என்னிடம் சொல்லாதே. நீ பொன்னோடு பொருளோடு மண்ணோடு மணியோடு திரும்புகிற பலரும் மெச்சத்தக்க உன் வரவு குறித்து இனி இந்த வீட்டில் வாழ வருபவளிடம் கூறு." தன் தலையை தடவிக்கொண்டான் தலைவன். காரணம் தலையில் இடி விழுந்தது போல இருந்தது அவ்வார்த்தைகள். அவள் சொன்ன கருத்தைத் தனக்குள்ளாகவே சொல்லிப் பார்த்துக்கொண்டான். 'செல்லாமை உண்டேல் எனக்குரை, மற்றுநின் வல்வரவு வாழ்வார்க்கு உரை' தலைவன் பிரிந்துபோனால் தலைவி இறந்துவிடுவாளாம். எப்படி இருக்கிறது இந்த நாடக நிகழ்ச்சி? இதில் காணப்படுகிற தலைவியைப் போலத்தான் நீயும் ஒரு கட்டளை போட்டுள்ளாய்: உங்கள் வரவையே எதிர்நோக்கி உள்ளேன். வார்த்தைகள் அனுப்பவேண்டாம்.

இதுதான் நான் கடிதவாயிலாக உனக்குத் தருகிற கடைசி வார்த்தைகள். அடுத்த கப்பலில் ஊர் புறப்படத் தயார் செய்துவிட்டமையால் இனி என் கடிதங்கள் வரமாட்டா. நானே வருவேன், என் நளின மலர்த் தேனைக் காண!

உன்னைப் பிரிந்து பொருள் தேட வந்தாலும் வந்தேன். விலைப் பொருள் தேடியதைவிட அறிவுப் பொருளை அதிகமாகவே சம்பாதித்துக் கொண்டுள்ளேன். தமிழ் ஐயா சொல்லித் தந்த பாட்டுக்களை நன்கு படித்திருந்தும் அவற்றைச் சிந்தித்துத் பார்க்கக்கூட நினைப்பில்லாது இருந்த எனக்கு இப்போது சீர்தூக்கிப் பார்க்கும் அளவுக்குச் சீர்மையும் வாய்ப்பும் கிடைத்தது ஓரளவிற்கு மகிழ்ச்சிதான்.

இன்பமாகிய நற்பொருளை விட்டுவிட்டு விலைப்பொருளையே விரும்பும் வேசியரின் இன்பத்தை, அருளாகிய அறப்பொருளை உடைய அறிஞர்கள் ஆசைப்படமாட்டார்கள் (குறள் 914)

மதிநலத்தால் மாட்சிமைப்பட்ட அறிஞர்கள் எல்லார்க்கும் பொது நலமாகிய வேசியர் உறவை விரும்பமாட்டார்கள் (குறள் 915)

தம்முடைய நலத்தை உலகறியச் செய்ய விரும்பும் அறிஞர்கள், வனப்பினால் களிப்புற்று தமது அற்ப நலத்தை எல்லோருக்கும் அளித்துப் பணஞ் சேர்க்க விரும்பும் பரத்தையர்கள் உறவை விரும்பவேமாட்டார்கள் (குறள் 916)

'ஒரே சமயத்தில், பணத்திற்காகப் புணர்ந்தும், மனத்தால் விரும்பிப் புணராமலும் இருக்கும் மனப்பண்பை உடைய வேசியர்களின் உறவு அயோக்கியர்களுக்கே சொந்தம்' (குறள் 920.)

இப்படியாக வள்ளுவர் சொல்லிச் சென்ற வாய்மொழிகளை நான் நன்கறிந்தும் குற்றஞ் செய்துவிட்டேன், அதற்குக் காரணம் என் மனமே. 'மனம்' என்பது ஒரு அகக்கருவி. மனிதனை மனமே உயர்வையும் தாழ்வையும் அடையச் செய்கிறது. மனமானது ஐந்து புலன்களின் வழியாகச் சென்று அவாவைப் பெருக்கி மனிதனுக்கு இன்ப துன்பங்களை விளைவிக்கிறது. ஒருகணம்கூட மனம் சும்மா இருக்காது. பள்ளம் நோக்கி ஓடும் தண்ணீர்போல, தீய நெறிகளைத் தேடி மனம் ஓடும். ஆகவே, நெஞ்சத்துடன் வாழ வலிமை வேண்டும். தீயநெறிகள் ஆவன, அழுக்காறு, அவா, வெகுளி, வெஃகல், பிறனில் விழைதல் ஆகியவைகளாகும். இவற்றை அறிந்து திருந்தி வலிமையுடன் வாழ்பவனே மனிதருள் மாணிக்கம் ஆவான்!

இப்போது தெரிகிறதா நேர்வழி பிறழ்ந்தமைக்கு உரிய காரணம்? மனவலிமை இல்லை ஆகவே, துயர்வழிப்பட்டேன். இதை அறியாமல், அல்லது ஏற்றுக்கொள்ள விரும்பாமல் ஏதேதோ பேசி உள்ளாய் உன் சென்ற கடிதத்தில், ருசி கண்ட பூனை, சுவை கண்ட பொருள் என்று பலப்பலவாக! வேண்டாம் உனக்கு இந்த வீண் கற்பனைகள்.

நான் தெரியாமல் கெட்டுவிட்டேன். கற்ற பாடங்களை கருத்தில் கொண்டு, சிந்தித்துப் பார்த்திருந்தால் இச்சிறு செயல் செய்திருக்க மாட்டேன். ஆகையால்தான் நான் என்னைப் பற்றிக் கூறும்போது நான் சூழ்நிலையால்-சந்தர்ப்பத்தால் கெட்டவன் என்றும் பரம்பரை அயோக்கியன் அல்லன் என்றும் சொல்லிவந்துள்ளேன்.

பிரகாசம் பொருந்திய நுதலினை உடைய வேசியர் தம் மனம் பிறிதொருத்தனிடம் அமைந்ததாக திருட்டுத்தனமாக அன்புடையார் போலச் செய்யும் எண்ணம் அனைத்தும் ஆராய்ந்து அறிந்திருந்த போதுங்கூட, பரம்பரையாக அயோக்கியத்தனம் செய்து வாழ்பவர்கள் அறியாதவர்கள் போலவே இருப்பர். அதற்குக் காரணம் அவர்கள் தொழில் அயோக்கியத்தனம் செய்து வாழ்வதே. இதைத்தான் நாலடியார் கூறுகிறது.

"உள்ளம் ஒருவன் உழையதாய் ஒண்ணுதலார்
கள்ளத்தால் செய்யும் கருத்தெல்லாம்-தெள்ளி
அறிந்த இடத்தும் அறியாராம் பாவஞ்
செறிந்த உடம்பி னவர்."

ஆகவே நான் பரம்பரைப் பேர்வழி அல்ல பாவஞ்செய்ய; இதைத் தெரிந்து தெளிந்து சிரித்து இருப்பாய். அடுத்த வாரம் வந்து சேருகிறேன். ஆம்! இதுதான் இறுதிக் கடிதம்.

உன் அன்புள்ள,
[illegible]

— மணிவண்ணன் —

அன்புள்ள அத்தான்,

வருகிறேன்-வருகிறேன், என்று எழுகிறீர்களே தவிர வந்துவிட்டதாக ஒரு வரியைக்கூட எழுதவில்லையே? அது குறித்துத்தான் என் நெஞ்சம் பெரிதும் கவலைப்படுகிறது. வார்த்தைகள் வேண்டாம். வரவு வேண்டும் என்றுகூட எழுதிவிட்டேன். இனி என்ன எழுதுவது என்று எனக்குப் புலப்படவே இல்லை.

வருவதாகச் சொல்லி வாராது இருந்துவிட்ட காதலனுக்கு, கவலைப்பட்டு நாளும் நலிந்து வந்த காதலி ஒரு தூது அனுப்பினளாம்.

"வழிமேல் மனமும் மனமேல் மயலும் வளர்ந்த மனை
கழிமேல் விரலும், விரல்மேல் துளியும்என் சோக மெல்லாம்
கழிமேல் இருக்கும் குருகினங்காள்! சென்ற காதலர்க்கு
பழிமேல் சுமக்கும் என்றே சொல்லுவீர் இந்தப் பாவிஎற்கே"

இது உப்பங்கழிமேல் இருக்கும் பறவைகளைப் பார்த்து காதலி சொல்லி அனுப்பிய தூது. காதலன் உடனே வந்து சேராவிட்டால் காதலி தற்கொலை செய்துகொண்டு விடுவாளாம். அதனால் காதலனுக்குப் பழிச்சொல் ஏற்படுமாம். ஆகவே, பழிச்சொல்லுக்கு அஞ்சியாவது உடனடியாகப் புறப்பட்டு வரும்படி வேண்டுகிறாள் காதலி. என்னே காதலியின் கருத்துச் சீர்மை? நான் உங்களை என்ன சொல்லிப் பயமுறுத்துவது? தற்கொலை செய்துகொள்ள எனக்குத் தைரியம் போதாது. கொலைத் தண்டனை தந்து உங்களுக்குத் தீங்குதர எனக்குத் திறமையும் இல்லை. பின் என் நிலை?

துன்பம், துன்பம், துன்பமே தானா?

துன்பம் மக்களின் பொதுஉடைமை. பலரும் பலவகையாகத் துன்பத்தை உணர்கிறார்கள். பாலுக்குச் சீனி இல்லை, பசிக்குச் சோறு இல்லை, கூழுக்கு உப்பு இல்லை, கவிதைக்கு ஒட்டம் இல்லை, கதைக்குச் சுவை இல்லை, உள்ளத்திற்கு உவகை இல்லை, துணைக்கு ஒருத்தி இல்லை என்று எத்தனையோ கவலைகள். துன்பத்தை உணர்கின்றவன் முரடனாக இருந்தால் முரட்டுச் சம்பவங்கள் நிகழ்ந்துவிடுகின்றன; அதே துன்பத்தை உணர்கின்றவன் அறிஞனாக இருந்தால் அத்துன்பம் சுவைமிகுந்த கலைப்பொருளாக நிலைத்துவிடுகிறது.

இப்படிப் படைக்கப்பட்ட கலைச்செல்வங்களே நம்பழந்தமிழ் நாட்டுப் பாடல்கள் என நான் எண்ணினேன். இதனை என் அண்ணன் செல்லப்பாவிடம் சொன்னேன். அவர் அதை அப்படியே ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டார். ஏன் என்று கேட்டதற்கு அவர் சொன்னார்:

'தங்கையே, நீ கூறுவதை அப்படியே நூற்றுக்கு நூறு உண்மை என்று கொள்ளுவதாயின், காதலனைப் பிரிந்து வாடும் காதலியின் துயரைப் பற்றி வழங்கி வருகிற பாடல்கள் அனைத்தும் பெண்களால் அல்லவோ பாடப்பட்டிருக்க வேண்டும்? உண்மை நிலை அப்படி இல்லை. ஆகவே, பாடலுக்கு முழுமையான அடிப்படைக் காரணம் அனுபவம் இல்லை; அறிவு, கருத்தால் நினைந்து அதனைப் படம்பிடித்துத்தான் உணர்ந்த ஒன்றை உலகமும் அறியட்டும் என்ற பரந்த எண்ணத்தோடு கலைஞர்கள் நம்க்குத் தந்துபோன செல்வங்களே பழந்தமிழ்ப் பாடல்களாகும்."

நீங்கள் பிரிந்துபோன துயரை நான் முழுதும் உணர்ந்து இறந்து படாதபடி என்னைக் காப்பாற்றி வருவதே பழந்தமிழ் நூற்கள்தாம் அவை நெடிது வாழி, நீடு வாழி.

பிரிவுநோய் உளத்தை அழிக்கின்றது; உடம்பையும் அழிக்கின்றது. உற்ற துன்பத்தைக் கண்கள் வடித்து நிற்கும் கண்ணீரால் அறியலாம். மேலும் உடலில் படர்ந்துள்ள பசலைநோயாலும் அறியமுடியும். இதனை வள்ளுவர் நயம்படக் கூறுகிறார் கணவனைப் பிரிந்த காதலியின் வாயிலாக.

என் நெஞ்சம் என் காதலன் வாழும் இடத்திற்கு நினைத்த நிமிஷத்திலேயே சென்றுவிடுகிறது. கண்களால் அப்படிச் செய்ய இயலவில்லை. மனம் தனித்து நின்று செய்துவிடும் ஒன்றைத் தாங்கள் இருவராக நின்றுங்கூட செய்ய முடியவில்லையே என்று கவலை கொண்ட கண்கள் கண்ணீரைப் பெருக்கி அழுகின்றன. காதலனைக் கண்டு காதல் கொண்ட கண்களுக்கு இதுவும் வேண்டும் இன்னமும் வேண்டும் என்று கருத்துச் சிரிக்கிறது. கண்களோ தாங்கள் வடித்த கண்ணீரில் மிதந்து அலைக்கழிக்கப்படுகின்றன.

உள்ளம்போன்று உள்வழிச் செல்கிற்பின் வெள்ளநீர்
நீத்தல மன்னோஎன் கண்.

—(குறள் 1170)

(மனம் போலக் காதலர் உள்ள இடத்திற்கு விரைந்து செல்ல வல்லவையாயின் என் கண்கள் இங்ஙனம் வெள்ளமாகிய நீரை நீந்தா)

எப்படி இருக்கிறது பாட்டு!

காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி மாலை மலரும் இப்பசலை நோயால் நான் படுகின்ற வேதனை சொல்லி முடியாது. இங்ஙனம் நாளெல்லாம் நான் கவலைப்படுவதென்றால் அது உங்களுக்கு நல்லதாகுமா? இதனைத் தயவு செய்து சிந்தித்துப் பாருங்கள். பொருள் தேடப் போனது எனக்காகத் தானே? தேடிய பொருளை இன்புற்று ஏற்றுக்கொள்ள, நான் இல்லை என்ற நிலை ஏற்பட்டுவிடுமாயின் உங்கள் முயற்சி என்னவாகும்? வீண்முயற்சி ஆகி வெட்டி வேலையாகிவிடும் அல்லவா?

ஆகவே, தேடியன போதும், திரும்புங்கள் சீக்கிரம். வாடிய நிலை மாறட்டும். வாயார அழைக்கிறேன் வருக என் கோமகனே விரைந்து!

[illegible]

வெண்பாப் போட்டி

25. கால்வாசி காணாது காண்

வெண்பாப் போட்டி 25-ன் பரிசுபெற்ற வெண்பாவையும், ஏனைய தகுதியுடைய வெண்பாக்கள் சிலவற்றையும் சென்ற இதழில் வெளியிட்டோம். இந்த இதழில் மேலும் சில தகுதியுடைய வெண்பாக்களை வெளியிட்டுள்ளோம்.

பத்துப்பாட் டுக்கலி பாரத்தொல் காப்பியநூல்
எத்திக்கு மெச்சும் இனியவகம்-இத்தனையும்
பால்வீசு செந்தமிழின் பான்மைக்கு மற்றமொழி
கால்வாசி காணாது காண்.

—சு. நாராயணசாமி, மேலைச்சிவபுரி.

★

கொங்கு மணிமுல்லை கொம்பு நறுந்தேனும்
வெங்குழல் வஞ்சி கனிமுத்துச் செங்கரும்புப்
பால்சாற்றில் செந்தினையும் பாலன் மழலைக்குக்
கால்வாசி காணாது காண்.

—அருவி, அரக்கோணம்.

★

பொங்கெழில் மதியும் புதுமுல்லை மோகனமும்
செங்கமல வார்ப்பின் செழுநலமும்-மங்கையவள்
பால்மொழியும் செவ்வதரப் பங்கயத்தின் சீரெழில்முன்
கால்வாசி காணாது காண்.

—ப. தாமரைச்செல்வன், உடுமலைப்பேட்டை.

★

வரம்பின்றிப் பேசாதீர்; வாய்த்துடுக்காய் ஏசும்
சிரம்கனத்த கேருவே! சிங்கக்-கரமுயர்த்தி
வேல்போற் றமிழர்கூட் டம்விரைந்தால் உம்படையும்
கால்வாசி காணாது காண்.

—மங்கலவாணன், திருமங்கலம்.

★

வண்ணத் துயிலுடுத்தி வண்டார் மலர்சூடி
மின்னல் எழில்காட்டும் வேசியர்க்கு-நின்னுடைய
காழ்கனக மாழை கரைஇறந்த பொற்செல்வம்
கால்வாசி காணாது காண்.

—எஸ். எ காதர், மேலூர்.

★

கற்றூர் திருக்குறளைக் காமுறுவர்! மேன்மக்கள்
வற்றாத் தமிழ்மறையை வாழ்த்துவர்!-மற்றதுபோல்
நூல்இல்லை உண்டேல்எந் நூலும் அதன்முன்னர்
கால்வாசி காணாது காண்.

—ந இரகுராசன், சென்னை-5.

★

தேனுமுட் கொள்ளத் தெவிட்டிவிடும் நன்மங்கை
ஈனுமின்பம் மூப்பி லிளைத்துவிடும்-தேன்தமிழின்
மேல்கொண்ட காதலென்றும் மீறுவதால் முன்னிரண்டும்
கால்வாசி காணாது காண்.

—வே. திருவேங்கடம், திருக்கழுக்குன்றம்.

★

வாழவந்தோர் ஆரியத்நார் வண்தமிழ் நாட்டினில்
சூழ்எண்ணிச் சூதுடனே சூழ்ந்திட்டார்-வாழவகை
நால்மறை வேதநெறி ஓதினதால்; நம்நிலையோ
கால்வாசி காணாது காண்

—இரா. இளங்கவி, கண்டர்கோட்டை.

★

இன்றேனும் மக்கள் இடும்பைபசி தீருமெனச்
சென்றிரந்தேன் தந்தார் சிறுகஞ்சி-என்செய்கோ!
சேல்விழியே! அக்கஞ்சி பச்சையிளஞ் சேய்தனக்கே
கால்வாசி காணாது காண்

—தமிழ்த்தேவன், வேலூர்.

★

தெள்ளித் தெளிந்திட்ட தேன்மொழியாம் தீந்தமிழை
அள்ளிப் பருகி அமைத்திட்ட-வள்ளுவர்முன்
பால்வாடிக் காய்ந்த பசுப்போல் வடமொழிநூல்
கால்வாசி காணாது காண்.

—அ. அரங்கசாமி, ஆம்பற்பட்டு.

மானம் விளைநிலமா வெந்திறலே வித்தாக
தானம் தழைக்கும் தமிழ்மறவர்-வான்புகழ்முன்
கோழை வடவர் குலவேள்விப் பண்புதான்
கால்வாசி காணாது காண்.

—செல்லகுழந்தையா, வேட்டாம்பாடி.

★

உழவன் தொழிலாளி ஓங்கு புகழ் பாடி
எழுதப் பயன்படுமோ ஈண்டு-தொழுதுழைத்துத்
தோள்மெலிவோர் கூலி துடிக்கு மவர்பசிக்குக்
கால்வாசி காணாது காண்.

—பெ. இராமையா, சாலிச்சந்தை.

★

சாதிமதம் நால்வேதம் சாத்திரம்பு ராணமெலாம்
ஓதிய பன்னெறிகள் ஒண்டொடியே-நீதியொடு
சால்புநிறை வள்ளுவனார் தந்தமுப் பால்நெறியில்
கால்வாசி காணாது காண்.

க. வீ. குருசாமி, சென்னை-23.

★

ஆரணங்கு வெம்புலியை அஞ்சாது கைமுறத்தால்
நேர்பொருது வென்றதமிழ்ப் போர்முறைக்கு-வீரமென
மேல்பறந்து குண்டுகளால் மாய்க்குமுறை ஒப்பிட்டால்
கால்வாசி காணாது காண்.

முருகு, வரகூர்.

★

எல்லா மொழியின் எழிலனைத் தும்கூட்டி
தொல்புகழ் தென்தமிழைச் சீர்தூக்கின்-நல்லவரே!
சால்புடைய தென்னாட்டின் செந்தமிழின் சீர்வளத்தில்
கால்வாசி காணாது காண்.

—கருவை. பா. செ. சிவசுப்ரமணியன், தருமபுரி.

★

மின்மினிக ளைப்பிடித்து மந்தையாய்ச் சேர்த்திடினும்
நன்விளக் கொன்றினொளி நல்கவுண்டோ?-இந்தியேனின்
நூல்எல்லாஞ் சேர்த்தாலும் எந்தமிழ் நூல்நயத்தில்
கால்வாசி காணாது காண்.

—வெ. கு. வெங்கடேசன், சிதம்பரம்.

★

தொட்டிழுக்கும் பிள்ளைக்கும் தூய உளமதிலே
பட்டிழுக்கும் நூலுக்கும் பாலுக்கும்-பட்டினிக்கும்
ஆல்போலுஞ் சுற்றங்கொள் ஆசிரியர் ஊதியந்தான்
கால்வாசி காணாது காண்.

—ஈட்டி இறைவன், அழகரடி.

★

நல்வழியைக் காட்டவென நிற்கும் புராணங்கள்
சொல்பவற்றுள் எல்லாமும் சொத்தைகளே-அல்லாமல்
சால்புடையோர் யாரும் சரியென்று கொள்உண்மை
கால்வாசி காணாது காண்.

—தமிழவேள், வேலூர்.

★

ஔன் தமிழம்மா ஒன்றுக்கு மஞ்சாதே
தாயுன் பழம்பெருமை நாழாது-தாயநல்
ஆல்போன்ற நின்முன்னே அச்சில்லாப் புல்லிந்தி
கால்வாசி காணாது காண்.

சோ. கண்ணப்பன், பேரூர்.

★

எந்நாள் உலகுண்டோ அந்நாள் முதலாக
தன்நேர் இலாதுயர்ந்தார் நம்மன்னை-நன்னூல்கள்
ஆல்போல் வளம்பெருக்க ஆங்கவைமுன் மற்றவைகள்
கால்வாசி காணாது காண்.

—ப கிருட்டிணன், பென்னாகர்.

★

நற்கடலின் மாமலையின் நானிலத்திற் கண்ணுன
பொற்கதிரின் பொற்புடைய பொன்னனைய-வெற்புடைய
வாலறிவின் நற்றமிழ்க்கு வாடுமல ரிந்தியுமோர்
கால்வாசி காணாது காண்.

—அ. கிருஷ்ணன், சரவணபட்டி.

★

செந்நெல் விளைத்தியும் சீரார் தமிழகத்துப்
பன்னரிய தீப்புயலால் பைந்தமிழர்-நன்னலந்தான்
பாழ்பட்டு வீழ்ந்தக்கால் வீழ்வடவர் செய்யுதவி
கால்வாசி காணாது காண்.

—ம. அண்ணாமலை, புத்தூர்.

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் கண்ணதாசன், ஏ. எல். எஸ். அச்சகம், 2-127, மவுண்ட் ரோடு, சென்னை - 6.